Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 06 சனிக்கிழமை (19-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:144




மூதூரில் படையினரும் - பொலிஸாரும் பார்த்திருக்க - கோடாரி, கத்தி, பொல்லுகள் சகிதம் கல்வீச்சு நடத்தும் இளைஞர்கள்

# கட்டைப்பறிச்சானில் குண்டு வீச்சு! சூடு!!

# இரு தமிழர்கள் உயிரிழப்பு; 14 பேர் காயம்!

## வீடுகள், கடைகள் தீக்கிரை! பெரும் பதற்றம் தொடர்கிறது!!

மூதூர்,ஏப்ரல்19

**மூதூர் கட்டைப்பறிச்சானில் நேற்று முற்பகல் இடம்பெற்ற குண்டுவீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இரு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; 14 பேர் காயமடைந்தனர்.**

**அத்துடன் நேற்றுப்பகல் இருதரப்பிலும் வீடுகள், கடைகள் போன்றவை தீயிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மூதூர்ப்பகுதியில் நேற்றும் பெரும் பதற்றநிலை நீடித்தது.**

மூதூர் கிழக்குப் பகுதிக்கு உணவு மற்றும் எரிபொருள் எடுத்துச் செல்லப் படுவது முஸ்லிம் குழுவினரால் தடுக்கப பட்டதாகக் கூறப்படுகின்றது. அதை ஆட்சேபித்து தமிழர்கள் கூட்டமாக ஒன்றுசேர்ந்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கட்டைப்பறிச்சான் இரா ணுவ முகாமுக்கு அருகில் ஆர்ப்பாட் டம் செய்தனர்.

அச்சமயம் அவர்கள் மீது கிரனேட் வீசப்பட்டது என்றும், அதில் சம்பூரைச சேர்ந்த தர்மலிங்கம் கமலதாசன் (வயது 25) என்பவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர்ப் பகுதியில் பதற்றம் தணிக்க மேலும் ஊரடங்கு; கூடுதல் படைகள்

### அமைச்சர்கள், அதிகாரிகள், கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்

மூதூர்ப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தணிக்க ஊரடங் குச் சட்டத்தை மேலும் அமுலப்படுத்துவ தெனவும், அங்கு கூடுதலான பொலிஸா ரையும், படையினரையும் கடமையில் ஈடுபடுத்துவதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

நேற்று மூதூரில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதற்கமைய பாது காப்பு அமைச்சர் உத்தரவுகளைப் பிறப் பித்தார்.

இதனையடுத்து நேற்று நண்பகல் முதல் இன்று அதிகாலை 6 மணி வரை மூதூர்ப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

ஆயினும், அச்சம் காரணமாகப் பலர் தமது வீடுகளை விட்டு பாதுகாப் பான இடங்களுக்குச் சென்று கொண் டிருக்கின்றார்கள்.

முன்னதாக நேற்றுக்காலை மூதூர் இராணுவ முகாமில் மாநாடு நடை பெற்றது.

பிரதமரின் பணிப்பின்பேரில் பாது காப்பு அமைச்சர் திலக் மாரப்பன, தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரசிங்க, பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதி காரிகளும் நேற்ற மூதூருக்கு வந்து நிலைமைகளை நேரில் கண்டறிந்த னர். இதன்பின் மூதூர் இராணுவ முகா

(12 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் பிரதேசத்துக்குச் செல்ல முற்பட்ட

## தமிழ் எம்.பிக்கள் இருவரை திருப்பியனுப்பிய இளைஞர்கள்

மூதூர், கட்டைப்பறிச்சானில் புலி களின் பிரதேச எல்லையில் கூடிநின்ற தமிழ் இளைஞர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து அப பகுதியை நோக்கிவந்த இரா.சம்பந் தன், கே.துரைரட்ணசிங்கம் ஆகிய இரு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களைத் தமது பிரதேசத்துக்கு வரவிடாது திருப்பி அனுப்பினர்.

மூதூர், கட்டைப்பறிச்சானில் நேற்றுக் காலை தமிழ், முஸ்லிம் இளைஞர்கள இரு தரப்பாகப் பிரிந்து நின்று கல்லெறி யில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பதற றம் நிலவியது. பதற்றத்தைத் தணிக்க இரா.சம்பந்தன், கே.துரைரட்ணசிங்கம் ஆகிய எம்.பிக்கள் இருவரும் கண் காணிப்புக் குழுவினருடன் கண்கா

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரியில் குறைநிவர்த்தி சேவை

தென்மராட்சியில் குறைநிவர்த்தி சேவை இன்று காலை 9.30 மணிமுதல சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். அரச அதிபர், பிரதேச செயலர் மற்றும கிராமசேவையாளர்கள் இந்தச் சேவை யில் கலந்துகொள்வர். நிவாரண வெட்டு, 25 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவு ஆகியவற்றில் பாதிக்கப் பட்டவர்களும் கண்ணிவெடி அகற்ற உதவி தேவைப்படுபவர்களும் இச் சேவையில் பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## கலவரத்துக்கு முடிவுகட்ட இன்று கலந்துரையாடல்

### கண்காணிப்புக்குழு ஏற்பாட்டில்

கொழும்பு,ஏப்.19

மூதூரில் இடம்பெற்றுவரும் கல வரங்களுக்கு முடிவு ஏற்பட விடுத லைப் புலிகள் மற்றும் முஸ்லிம் பிரதி நிதிகள் பங்குபற்றும் கலந்துரையாடல் ஒன்றை இன்று நடத்த ஏற்பாடுகள் செய்துவருவதாக யுத்தநிறுத்தக் கண் காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் திதோர் தொல்கி சன் இத்தகவலை நேற்றிரவு பி.பி.ஸிக் குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரி வித்ததாவது:-

முஸ்லிம் சமூகத்தவரிடையே தீவிர வாதக்குழுக்கள் இருப்பது குறித்து நாங்கள் மிகுந்த கவலையடைகின் றோம்.

தற்போதைய பதற்ற நிலை தொடர் பாக கிளிநொச்சி, திருகோணமலை, மூதூர் ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகமெங்கிலும் இன்று அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்,ஏப்.19

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் புதிய எழுச்சியையும் வேகத்தையும் விதைத்த தியாகச் சுடர் அன்னை பூபதியின் 15 ஆவது நினைவு நாளான இன்று குடாநாட்டில் அடையாள உண்ணாவிரதம் உட்பட நினைவு நிகழ்வுகள் பல உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.

நயினாதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்துறை, நல் லூர், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்க ளில் இன்று காலை 9 மணிமுதல் அடையாள உண்ணாவிரதங்கள் இடம்பெறவுள்ளன. மாலை யில் உண்ணாவிரத நிகழ்வுகள் பூர்த்தியானதும் நினைவுரைகள், எழுச்சி நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

பொது அமைப்பினர் மற்றும் பொது மக்கள் இந்நிகழ்வுகளில் பங்குபற்றுவர்.

இந்த நிகழ்வுகளை ஒட்டி மஞ்சல், சிவப்பு வர்ணக்கொடிகளால் குடாநாடு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் பருத்தித்துறை சிவன்கோவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலையடிவேம்பு சபைத் தலைவர் நேற்று முற்பகல் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஏப்.19

அக்கரைப்பற்று ஆலையடிவேம் புப் பிரதேச சபைத் தலைவர் மாரிமுத்து இராசலிங்கம் (வயது 43) இனந்தெரி யாத இரு நபர்களினால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று பகல் 11.30 மணியளவில் அக்கரைப்பற்று ஆர்.கே.எம்.வீதியில் வைத்தே இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

உயிரிழந்த மாரிமுத்து இராசலிங் கம் இரண்டு பிள்ளைகளின் தந்தை யாவார். இவர் ஈ.பி.டி.பி. கட்சியின் அங்கத்தவர். இதற்கு முன் இவர் ஈ.பி. ஆர்.எல்.எவ். கட்சியில் அங்கத்துவம வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கொலை தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என அக்கரைப் பற்று பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஐ.எம்.புஹாரி தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் படுகொலை யைப் புலிகள் செய்திருக்கலாம் என ஈ.பி.டி.பியினர் அறிக்கை ஒன்றின் மூலம ஊடகம் தெரிவித்திருக்கின்றனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு உதவிப் பொருள்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் சர்வதேச முஸ்லிம் நிவாரண அமைப்பின் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபருடன் இணைந்து சிறுமி ஒருவருக்கு அன்பளிப்புப் பொருள்களை வழங்குவதனையும் அகில இலங்கை ஜெம்பயிய்துல் உலாமாக்கள் சபையின் தலைவர் அல்ஹாஜ் எம்.எம்.ஏ.முபாரக் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பத்மராஜ்.)*

### இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்ற
# சகல முஸ்லிம்களும் குடியமர்ந்தாலே உதவிப்பணிகளை செயற்படுத்தமுடியும்!
### அன்பளிப்பு வழங்கும் நிகழ்வில் அரசஅதிபர் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்கள் அனைவரும் இங்கு மீளக்குடியமர்ந் தாலேயே புனர்வாழ்வுப் பணிகளை திருப்திகரமாக மேற்கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன்.

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்த 85 முஸ்லிம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் அக்குடும்பங் களைச் சேர்ந்த மாணவ, மாணவிக ளுக்கு பாடசாலை உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு யாழ். ஐந்து சந்தி அருகே உள்ள புதிய பள்ளி வாசல் பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அரச அதிபர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அனை வரும் இங்கு மீளக் குடியமர்வதன் மூலமே அவர்களது சீரழிந்துபோன வாழ்க்கைத்தரத்தை மீண்டும் கட்டியெ ழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம் கள் ஏதிலிகளாகப் பட்டதுயரங்களை யும் துன்பங்களையும் நாம் நன்கறி வோம். இன்னமும் அவர்கள் இங்கு நிலைகொள்ளமுடியாது படும் அவ லங்களும் எமக்குப் புரிகின்றது.

இவர்களின் கஷ்டங்கள் தீர்வதற்கு அரசாங்கம் மட்டுமன்றி அனைத்துத் தரப்புக்களும் உதவிபுரிதல் வேண்டும்.

தமிழரும் முஸ்லிம்களும் இந்த நாட்டில் மிக நீண்டகாலமாகவே ஒன் றாக வாழ்ந்துள்ளார்கள். இதனடிப்படை யிலேயே விடுதலைப் புலிகள் நேசக் கரம் நீட்டி மீண்டும் முஸ்லிம்களை இங்கு குடியமர அழைத்துள்ளார்கள்.

இவர்களுக்கான, அரசாங்கம் சார்ந்த உதவிகளை வழங்க என்னால் இயன்ற சகல ஒத்துழைப்புகளையும் வழங்க நான் தயாராக உள்ளேன் - என்றார் அவர்.

இந்த நிகழ்வில் சவூதியரேபியா வைச் சேர்ந்த சர்வதேச முஸ்லிம் நிவாரண ஒன்றியத்தின் பணிப்பாளர் டாக்டர் சுலைமான் மற்றும் இவ்வ மைப்பின் பொதுசனத் தொடர்பாளர் யூசுவ் அஸ்ஸல்போய் மேற்படி அமைப்பின் இலங்கைக்கான பணிப் பாளர் மௌலவி நஷுர் மற்றும் உலா மாக்கள் சபைத் தலைவர் எம்.ஏ. முபாரக், முஸ்லிம் பகுதிக் கிராம சேவையாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-12)

### கூட்டணியின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.19

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள கூட்டணி அலுவலகத்தில் உள்ள தந்தை செல்வா அகத்தில் இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவுதினம், மேதினம் ஆகியன தொடர்பான ஒழுங் குகள் குறித்து ஆராயப்படவுள்ள இக கலந்துரையாடலில் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் மாவை சேனா திராசா கலந்து சிறப்புரையாற்றுவார். (ஒ-3-10-86)

# ஜனாதிபதி சந்திரிகா இன்று பங்களாதேஷுக்கு விஜயம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜய மாக இன்று பங்களாதேஷ் புறப்பட் டுச் செல்கின்றார்.

தற்போது செயலற்றுப் போயிருக் கும் தெற்காசிய நாடுகள் கூட்ட மைப்பை (சார்க் அமைப்பை) மீண்டும் செயற்படவைப்பது அவரது விஜயத் தின் முக்கிய நோக்கம் எனக் கூறப் பட்டது.

காஷ்மீர் விவகாரத்தில் இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான உறவில் ஏற்பட்ட விரிசல் சார்க் அமைப்பின் செயற்பாட்டில் தேக்க நிலையை ஏற்படுத்தியிருந்தது. இதனால், சார்க் மாநாடு கூட்டப்படா மல் - காலவரையறையின்றி - அது ஒத்திவைக்கப்பட்டு வருகின்றது.

அந்த நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி சார்க் மாநாட்டை மீண்டும் கூட்டுவதற்கான ஆரம்பமுயற்சியா கவே ஜனாதிபதி குமாரதுங்க பங்களா தேஷ் செல்கின்றார்.

அங்கு பங்களாதேஷ் பிரதமர் காலித ஸியாவை அவர் சந்தித்துப் பேசுவார். இரு நாடுகளுக்கும் இடையி லான வர்த்தகப் பரிமாற்றம் மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு ஆகியவை குறித்தும் அவர்கள் கலந்துரையாடு வர். (ஒ)

# ஒறுகொடவத்தை வன்செயல்களின் சூத்திரதாரி பொலீஸாரால் கைது!

கொழும்பு,ஏப்.19

ஒறுகொடவத்தை வன்செயல் களுக்கு மூலகாரணமானவர் எனக் கருதப்படும் புறுதாள உலகக் கோஷ் டியைச் சேர்ந்த 'ஹாம்மல்லி' என்றழைக கப்படும் நபரொருவர் கிராண்ட்பாஸ் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலீஸாரைத் தாக்கியதோடு பொலீஸாரின் இரண்டு மோட்டார் சைக் கிள்களுக்குத் தீ வைத்தது, சர்ச்சைக் குரிய வீட்டை உடைத்து சேதப்படுத் தியது போன்ற சம்பவங்களின் பின் னணியில் இருந்து செயற்பட்டவர் இவர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸாரால் தேடப்பட்டுவந்த இந்த நபர் கிராண்ட்பாஸ் பகுதியில் தமிழ்நாடு என்றழைக்கப்படும் இடத் திலுள்ள வீடொன்றில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய் யப்பட்டார்.

ஒறுகொடவத்தைப் பகுதியில் உள்ள பல வீடுகள், கடைகள், வாக னங்கள் முதலானவை அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களின்போது சேதத்துக்குள்ளாகின என்பது குறிப் பிடத்தக்கது.

ஒறுகொடவத்தை கம்கரு தொடர் மாடி வீடொன்றில் சிறுமியொருவர் சங்கிலியால் கட்டிவைக்கப்பட்டிருந்தார் எனவும் குறிப்பிடப்பட்ட வீட்டில் பல்வேறு சமூக விரோத செயல்கள் இடம்பெற்றன என்றும் அவற்றிற்குப பொலீஸார் உடந்தையாகவிருந்தனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது. இத னால், பொதுமக்களுக்கும் பொலீ ஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

நடைபெற்ற கலவரங்களுக்கு காரணமானவர்கள் எனச் சந்தேகிக் கப்பட்ட சிலர் ஏற்கனவே கைதுசெய் யப்பட்டனர். எல்லாவற்றிற்கும் சூத்திர தாரி என நம்பப்படும் 'ஹாம்மல்லி' நேற்றுமுன்தினம் இரவே கைதுசெய் யப்பட்டார். (ஒ)

### 'பிக்கப்' வாகன விவகாரம்:
# பி.சபைகளின் செயலர்களுடன் அமைச்சர் ஜயலத் ஆலோசனை
### நாளைமறுதினம் நடத்துகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.19

வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபையால் வழங்கப்பட்ட 'பிக்கப்' வாகனங்களை இதுவரை மீளக்கை யளிக்காத பிரதேச சபைகளின் செய லாளர்களுடன் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா எதிர்வரும் திங்கட்கிழமை கலந்துரையாடவுள்ளார்.

குடாநாட்டில் ஈ.பி.டி.பியின் கட்டுப் பாட்டில் இருந்த ஆறு பிரதேச சபை களுக்கு புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு 'பிக்கப்' வாகனங் களை வழங்கியிருந்தது. அந்த வாக னங்களை அச்சபைகளின் தலைவர் கள் பாவித்துவந்தனர்.

சபைகள் கலைக்கப்பட்டு, செய லாளர்களின் பொறுப்பில் அச்சபைகள் கையளிக்கப்பட்டபோது 'ரான்' வழங் கியிருந்த 'பிக்கப்' வாகனங்கள் சபைகளிடம் இதுவரை கையளிக்கப் படவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த வாகனங்களை மீளப்பெறு வது தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சர் ஜயலத் அந்தச் சபைக ளின் செயலர்களுடன் கலந்துரை யாடவுள்ளார்.

யாழ்.செயலகத்தில் நாளை மறு தினம் திங்கட்கிழமை முற்பகல் இச் சந்திப்பு இடம்பெறும்.

இந்தச் சந்திப்புக்கு முன் முற்பகல் 10 மணிக்கு அமைச்சர், ப.நோ.கூ. சங் கங்களின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களுடன் கலந்துரையா டுவார். ப.நோ.கூ. சங்கங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அமைச் சர் கேட்டறிவார்.

அன்று பிற்பகல் 2 மணிக்கு குடா நாட்டில் யுத்தம் காரணமாக பாதிக் கப்பட்ட அங்கவீனர்கள் 95 பேருக்கு காசோலைகளை அமைச்சர் ஜயலத் வழங்கவிருக்கின்றார். (ஒ-3-10)

### படையினரால் கைதுசெய்யப்பட்டு
# உடல், உளப் பாதிப்படைந்தோருக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.19

கடந்தகாலத்தில் படையினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக ளுக்கு உள்ளாகியதால் பாதிப்படைந் தவர்களுக்கான உதவித் திட்டங் களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக புனர்வாழ்வுக் கழகம் வெளியிட்ட செய்திக்குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்தகாலத்தில் ஸ்ரீலங்கா அர சாங்கத்தின் படைகளினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத் தப்பட்டு உடல், உளப் பாதிப்படைந் தவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவித் திட்டங்களை நடை முறைப்படுத்த உள்ளது. ஆகவே, அவ் வாறு பாதிப்படைந்தவர்கள் 82/1, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் எனும் முகவரியில் அமைந்துள்ள தமி ழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.மாவட்ட பணிமனையுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண் டப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ஒ-ரி)

# தேவைகளை இலகுவில் பெற வசதியாகவே முதியவர்களுக்கு அடையாள அட்டைகள்!
### முன்னாள் வங்கியாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

முதியவர்கள் தமது தேவைகளை யும் உரிமைகளையும் இலகுவில் பெறு வதற்கு வசதியாகவே முதியோர் அடை யாள அட்டை வழங்கும் திட்டம் செயற் படுத்தப்படுகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் வங்கியாளர் சங்கத்தலைவர் கேகணேச மூர்த்தி.

65 வயதிற்கு மேற்பட்ட முதியோ ரைப் பதிவுசெய்து அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு யாழ்.வேம்படி மக ளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட போதே கே.கணேசமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது நாட்டில் மட்டுமல்லாது உல கின் பல நாடுகளிலும் முதியோர்க ளுக்கெனத் தனித்துவமான இடம் வழங்கப்பட்டு வருகின்றது.

முதியவர்கள் தம் கடமைகளைச் செய்வதிலும், தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் சிரமங்களை எதிர்கொள் ளாது விட்டுக்கொடுத்து உதவ வேண் டியவர்கள் இளைய தலைமுறை யினரே. அவ்வாறு முதியவர்களுக்கு மதிப்பளிக்கும்போதுதான் அவர்கள் இந்த சமூகத்திற்காக ஆற்றிய சேவை களை நாம் மதித்ததாக அர்த்தமாகும்.

அரசால் வழங்கப்படும் அடையாள அட்டை வைத்திருப்போருக்கு அதில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்ற அனைத் துச் சலுகைகளையும் வழங்க வேண் டியது அனைவரினதும் கடமையாகும்.

எனினும், வயதானவர்கள் பஸ்க ளில் நின்றுகொண்டு பயணிப்பதும், வைத்தியசாலைகள், வங்கிகள், பொலீஸ் நிலையங்கள் முதலான பொது இடங்களில் வரிசையில் நெடு நேரமாகக் காத்திருப்பதும் மிகுந்த மனவேதனையைத் தருவனவாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இளைய தலைமுறையினர் வயதானவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

முதியவர்கள் எல்லோரையும் தம் பெற்றோராக நினைக்கும் இளைய தலை முறையினால்தான் உண்மை யான சமூக நலன்மிக்க சமுதாயத் தினைக் கட்டியெழுப்பமுடியும்.

இன்று தேசிய சேமிப்பு வங்கி யால் வயது முதிர்ந்தோர்க்கென மேலதிகமாக 1.5 சதவீத வட்டி வழங்கப்படுகின்றது. இதனைவிட அரச மருந்துக் கூட்டுத்தாபன விற்பனை நிலையங்களில் 2 சதவீத கழிவுடன் மருந்துகளைக் கொள்வனவு செய்ய முடியும். இத்தகைய நன்மைகளைப் பெறுவதாயின் கட்டாயமாக வயது வந் தவர்கள் அனைவரும் இவ் அடையாள அட்டையை வைத்திருத்தல் வேண்டும்.

சமூகசேவைத் திணைக்களத்தி னால் இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

அடுத்த மாதமும் முதியோர் அடை யாள அட்டை வழங்கும் பணி மேற் கொள்ளப்பட உள்ளது.

இந்த முதியோர் அடையாள அட் டையைப் பெறவிரும்பும் முதியவர்கள் யாழ்.பிறவுண் வீதியில் உள்ள ஓய்வு பெற்ற வங்கியாளர் சங்கக் கிளையு டன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-12)

# சதாமின் ஒன்றுவிட்ட சகோதரர் அமெரிக்கப் படையால் கைது!

பக்தாத்,ஏப்.19

சதாம் ஹுசைனின் ஒன்றுவிட்ட சகோதரரான பார்ஷான் இப்ராஹிம் அல்-ரிக்ரிடி பக்தாத்தில் அமெரிக்கப் படையினரால் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் சதாமின் ஆட்சிக் காலத்தில் அரசின் செய்தித்துறைப் பொறுப்பாளராக இருந்துள்ளார். சதாம் எதிர்ப்பாளர்களின் மரணம் மற்றும் சித்திரவதைகளுடன் இவருக்கு நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

சிரிய எல்லையில் வைத்து பார்சனின் சகோதரரான இப்ராஹிம் ஹசன் அல்-ரிக்ரிடி கடந்த ஞாயிறன்று கைது செய்யப்பட்டிருந்தார்.

பார்சன் கைதுசெய்யப்பட்டதை அமெரிக்கப் படைகளின் தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் ஜெனரல் வின்சென்ட் புரூக்ஸ் உறுதிப்படுத்தினார்.

கைதான பார்சன் சதாமின் ஆலோசகராகவும் பணியாற்றியவர். சதாமின் நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் நன்றாகத் தெரியும் என்று அமெரிக்கர்கள் கூறுகின்றனர். ஆனால், பார்சன் எவ்வாறு கைது செய்யப்பட்டார் என்ற விடயம் தெளிவுபடுத்தப் படவில்லை.

(ஓ)

# ஈராக் தலைவர்கள் சிரியாவில் தஞ்சம் ஆதாரம் இருக்கிறது என்கிறார் புஷ்!

வாஷிங்ரன்,ஏப்.19

"ஈராக்கை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியதும் அங்கிருந்து தப்பியோடிய ஈராக்கியத் தலைவர்கள் பலர் சிரியாவில் தஞ்சம் அடைந்துள்ளனர். அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றன."

- இவ்வாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்துள்ளார்.

வாஷிங்ரனில் உள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகனில் இராணுவ அதிகாரிகள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.


ஈராக்கை கைப்பற்றியது முதலே அந்நாட்டுத் தலைவர்கள் சிலர் சிரியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகின்றது. அத்துடன், இரசாயன ஆயுதங்களை சிரியா வைத்திருக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டி இருந்தது.

அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுக்களை சிரியா கடுமையாக மறுத்திருந்தது.

இந்நிலையில், தமது குற்றச்சாட்டுக்கள் எல்லாவற்றுக்கும் ஆதாரங்கள் இருப்பதாக புஷ் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:-

"ஈராக்கில் இருந்து தப்பிய தலைவர்கள் சிரியாவில் தஞ்சம் அடைந்துள்ளார்கள். அவர்களுக்கு அந்த நாடு அடைக்கலம் அளித்துள்ளது.



பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களையும் அது வைத்துள்ளது.

"ஈராக்கியத் தலைவர்கள் சிரியாவில் இருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்களும், சிரியாவில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களும் எம்மிடம் இருக்கின்றன.

"அவற்றை விரைவில் வெளியிடுவோம். ஈராக் போரில் சிரியா தமது போராளிகளை ஈராக் படைக்கு ஆதரவாக அனுப்பி வைத்ததற்கான ஆதாரங்களும் எம்மிடம் இருக்கின்றன" - என்றார் புஷ்.

அதேசமயம், அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களை அடுத்து தமது நாட்டில் தஞ்சமடைந்துள்ள ஈராக்கியத் தலைவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு சிரியா ஆலோசித்து வருவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். அதன் ஒரு பகுதியாக அவர் சிரியாவுக்கும் செல்லவுள்ளார்.

சிரியாவில் ஆயுதசோதனை நடத்துவது மற்றும் ஈராக் தலைவர்களைத் திருப்பி அனுப்புவது உட்பட பல முக்கிய விடயங்கள் பற்றி அவர் சிரியத் தலைவர்களுடன் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



பெரு நாட்டின் தென்பகுதி நகரான பூலூவில் பயணிகள் பஸ் ஒன்று திடீரென விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்ததில் குறைந்தது 20 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். மேலும் 28பேர் படுகாயமடைந்தனர். விடுமுறையைக் கழிக்கச் சென்று கொண்டிருந்த பயணம் செய்த பஸ்ஸே விபத்துக்குள்ளானது. தீயில் கருகிய பஸ் வீதியின் ஓரத்தில் சிதைந்த நிலையில் கிடப்பதை ஒருவர் பார்வையிடுகிறார்.



கோடை காலம் ஆரம்பமாகி விட்டதனால் வெய்யில் கொளுத்துகின்றது. இந்தியாவிலும் வெப்பம் தாங்கமுடியாத நிலையை அடைந்து கொண்டிருக்கிறது. கோடை காலத்துக்கு இதமான வத்தகப்பழ வியாபாரமும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. அவ்வாறு விற்பனைக்கு விடப்படவுள்ள வத்தகப்பழங்களின் மேல் அவற்றை உற்பத்தி செய்த விவசாயி ஒருவர் ஆனந்தமாக உறங்குவதைப் படத்தில் காணலாம்.

# பக்தாத்தில் நடந்த சூறையாடல்; புஷ் ஆலோசகர் பதவி விலகல்

வாஷிங்ரன்,ஏப்.19

அமெரிக்கப் படைகள் ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தைக் கைப்பற்றியதும் அங்கு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. கொள்ளைச் சம்பவங்களும் சூறையாடல்களும் தாராளமாக நடந்தன. இவற்றுக்கெல்லாம் பொறுப்பேற்று அமெரிக்க ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

சூறையாடல்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது மிகப் பெரும் பொக்கிஷமான பக்தாத் அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற சூறையாடல்தான். அங்கு ஒரு லட்சம் அரிய கலைப் பொருள்கள் இருந்தன. பழங்கால நாகரிகங்களைப் பறைசாற்றும் இந்த அரிய கலைப் பொருள்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து திரட்டப்பட்டவை.

ஆனால், இப்போது அவை எவையும் அங்கு இல்லை. அனைத்துப் பொருள்களும் சூறையாடப்பட்டுவிட்டன. இருக்கும் சில பொருள்களும் சேதமாக்கப்பட்டுவிட்டன.

இதற்குக் கண்டனம் தெரிவித்தே அமெரிக்க அதிபரின் கலாசாரத் துறை அமைச்சக மூத்த ஆலோசனை அதிகாரியான மார்ட்டின் தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார்.

மேலதிக அமெரிக்கப் படைகளை அனுப்பி பக்தாத்தில் நடந்த சூறையாடல் சம்பவங்களை தடுத்து நிறுத்த அதிபர் புஷ் தவறிவிட்டார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பக்தாத்தில் இருந்த புராதன முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களை பாதுகாக்கத் தவறிவிட்டதற்கு தானும் பொறுப்பு ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறியிருக்கிறார். (ம)

## பிலிப்பைன்ஸ் சண்டையில் 10பேர் பலி!

ஜகார்த்தா,ஏப்.19

பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் 10 பேர் உயிரிழந்தனர்.

தீவிரவாதிகள் இராணுவ முகாம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்த முயன்றதில் இந்தச் சண்டை இடம்பெற்றதாகப் பொலீஸார் கூறினர்.

மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், தாம் அதனை முறியடித்து விட்டதாகவும் இராணுவம் கூறியது.

இந்தச் சண்டையில் 8 தீவிரவாதிகளும் 2 அரச படையினரும் உயிரிழந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம)

# பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க ஆயிரம் நிபுணர்கள் ஈராக்குக்கு!

## அமெரிக்கா அனுப்புகிறது

வாஷிங்ரன்,ஏப்.19

பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்க ஆயிரம் பேர் கொண்ட நிபுணர்கள் குழுவை ஈராக்குக்கு அனுப்புகிறது அமெரிக்கா.

இக்குழுவில் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், உளவுப் பிரிவு அதிகாரிகள், ராணுவ அதிகாரிகளும் இடம்பெறுவர் என்று பாதுகாப்புத்துறை அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இக்குழுவுக்கு ஈராக் ஆய்வுக்குழு எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சிவிலியன்கள் அதிகம் இடம்பெற்றுள்ள இக்குழுவின் தலைவராக ராணுவ ஜெனரல் ஒருவர் செயற்படுவார். இக்குழுவுக்குத் தேவையான உபகரணங்களுடன் மொபைல் ஆய்வு மைய வசதி அளிக்கப்பட்டுள்ளது.

பேரழிவு ஆயுதங்களைக் கண்டறிவது தொடர்பான மாதிரி ஆய்வுகள் அமெரிக்காவும் பிரிட்டனும் செய்து வருகின்றன. இக்குழுவில் பெரும்பாலும் ஆண்களே இடம்பெற்றுள்ளனர்.

ஈராக் ஆய்வுக்குழு மற்றும் அதன் மொபைல் ஆய்வுகூடத்தை ஈராக்கின் பல பகுதிகளுக்கு செல்வதற்கான பணிகளை ஈராக்கில் தற்போதுள்ள 75 ஆவது ராணுவப்பிரிவு செய்யும் என அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

ஈராக் வருமாறு ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு பிலிக்ஸ் அழைப்பு. இதற்கிடையில், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிக்க ஈராக் திட்டமிட்டிருந்ததா என்பதைக் கண்காணிக்க மீண்டும் ஈராக் வருமாறு ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு, ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹான்ஸ் பிலிக்ஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுதக் கண்காணிப்பாளர்கள் ஈராக் சென்று, பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறியவேண்டும் என ஊடகங்கள் சஞ்சிகைக்குத் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார் பிலிக்ஸ். (ம)

# ஈராக் விவகாரத்தில் ராஜினாமாவுக்கும் தயாராக இருந்தேன் என்கிறார் பிளயர்

லண்டன்,ஏப்.19

ஈராக் மீதான போருக்கு அனுமதி கோரும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் தோல்வியடைய நேரிட்டிருந்தால், பதவி விலகவும் தயாராக இருந்தேன் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் தெரிவித்துள்ளார்.

ஈராக்மீது பிரிட்டன் போர் தொடுப்பதற்கு அனுமதிகோரும் முக்கிய தீர்மானம் கடந்த மாதம் 18 ஆம் திகதி அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் மட்டுமன்றி ரொனி பிளயர் தலைமையிலான தொழிற்கட்சியைச் சேர்ந்த அதிருப்தி எம்.பிக்கள் சிலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எனினும், 9 மணிநேர விவாதத்துக்குப் பின்னர் இந்தத் தீர்மானம் நிறைவேறியது. ஆதரவாக 412 வாக்குகளும் எதிர்த்து 149 வாக்குகளும் பதிவாயின.

இந்தத் தீர்மானம் தோல்வியடைய நேரிட்டால், எனது பதவி விலகலுக்கு ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தேன் என்று லண்டன் நாளிதழுக்கு வெள்ளிக்கிழமை அளித்துள்ள பேட்டியில் ரொனி பிளயர் தெரிவித்துள்ளார். (ம)



ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்துவிட்டாலும் அங்கு இன்னும் அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளனர். அவ்வாறு நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் கண்ணிகளை அகற்றும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க கண்ணி அகற்றும் நிபுணர்கள் சிலர் அகற்றப்பட்ட வெடி பொருள்களுடன் காணப்படுகின்றனர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆனைப்பந்தியில் ஒரு வீடும், நாச்சிமார் கோயிலடியில் ஒரு காணியும், கன்னாதிட்டியில் மூன்று (3) கடைகளும் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். நேரடித் தொடர்புகளுக்கு: 0777 - 892034, 0777 - 883894, 071 - 359094. (சி-27450)

## வான் விற்பனைக்கு

நீலநிற வான் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நவநீதன், மணியகாரன் வளவு, மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (சி-27464)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: டான்போத், டச்சு றோட், உடுவில். (16884)

## இறைச்சிக்கோழி விற்பனை

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம் (**Electronic** நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16892)

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய அளவில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடிமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (16915)

## இறைச்சிக்கோழிகள் தேவை

**Broiler** இறைச்சிக் கோழிகள் தேவை. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16893)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான **Prima Broiler** குஞ்சுகள், அதிவிசேட **Prima** பேட்டுக குஞ்சுகள் 24-04-2003 வியாழக் கிழமை பிற்பகல் விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். அத்துடன், 21/2 மாத **Prima Hyline** வெள்ளை பேட்டுக்குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (16891)

## இசைக்குறிப்புகள்

ஓர்கன், வயலின் போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின இசைக்குறிப்புகள் (பாகம் 3) வெளிவந்துள்ளன. தொடர்பு: S.S. ரஜீந்திரன், 75,கோவில் வீதி, நல்லூர் (கைலாச பிள்ளையார் கோயிலிருந்து 300m தெற்கே) T.P. 0777 031293. (16911)

## விவசாய நிலம் தேவை

திருநெல்வேலி, கோண்டாவில், இணுவில், மல்லாகம், கொக்குவில், தாவடி ஆகிய பகுதிகளில் விவசாய நிலம் விலைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. தொடர்பு: வி.இல. 1852, C/o உதயன்.

(16936)

## வீடு தேவை

நான்கு பேர் கொண்ட சிறிய விரிவுரையாளர் குடும்பம் ஒன்றிற்கு யாழ்ப்பாணம், திருநெல்வேலியை அண்டிய பகுதியில் வீடு வாடகைக் குத் தேவை. விளம்பர இல. 1853, மே/பா உதயன். (16937)

## தவறிவிட்டன

கோவியம்பதி, கொற்றாவத்தை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சி.உமாகாந்தன் என்பவரின் தேசிய அ.அட்டை (இல.731390487V), விசேட அ.அ.(இல.0909027959), கல்வித்திணைக்கள அடையாள அட்டை என்பன வெள்ளிக்கிழமை (11-04-2003) தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சந்நிதியான் ஆச்சிரமத்திலோ மேற்படி முகவரியிலோ ஒப்படைத்து தவவும்.

(16903)

கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த சீவரத்தினம் சுஜீகரன் என்பவரது தே.அ.அ. (820310691V), பல்கலைக்கழக அ.அட்டை என்பன கொடிகாமத்திற்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கண்ட முகவரிக்கு அல்லது குளோபல் தொலைத் தொடர்பகம், பருத்தித் துறை வீதி, கொடிகாமம் என்னும் முகவரிக்கு ஒப்படைக்கவும். T.P. 070 212437, 0077 729821.

(16946)

## திருமண சேவை


1971, சுவாதி, செவ்வாய் 12, படித்த, கனடா மணமகனுக்கு கனடா P.R. உடைய மணமகள் தேவை. வேறுநாட்டு மணப்பெண்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: துரைவிமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (16859)

## வீடு விற்பனைக்கு

**சிவன் வீதி, உரும்பிராயில் 8 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.**
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
**திருமதி ஞானமணி மகாதேவன்**
**சிவன்வீதி,**
(16888) **உரும்பிராய்.**

# நீங்காத நினைவலைகள்

ஆண்டவன் படைப்பு
27 - 10 - 1947



அநியாய அழிப்பு
19 - 04 - 1999

## அமரர் சீவரத்தினம் சிவசுப்பிரமணியம்

(யாழ். பிரதான பொறியியலாளர், கட்டடத் திணைக்கள அலுவலர்)

ஆண்டுகள் பல சென்றாலும்
அழியாது அப்பா உங்கள் நினைவு
அந்தியப் படை வரவு தான்
உங்களுக்கு யமன் ஆனதோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*கண்டி வீதி,*
*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.*

(16674)


# பாதணிப் பிரியர்களுக்கு

## பொன் பாதணித் தயாரிப்பாளர்களான Ranpa வின் புதிய அறிமுகங்கள்....




யாழ்.மாவட்ட பாதணி வியாபாரிகளின்
கொள்முதல் தொடர்புகளுக்கு:
**விற்பனை முகவர்**
**255**, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் திரையரங்கு அருகில்)

உதயன்

## அன்னை பூபதி காட்டிய செல்நெறி தொடர்வோம்!

வீரத்தமிழ்த்தாய் - தியாகச்சுடர் - அன்னை பூபதியின் பதினைந்தாவது நினைவு தினம் இன்றாகும்.

ஈழத்தமிழர்களின் விடுதலை வேள்வித்தீயை அணைப்பதற்கு அந்நிய சக்திகள் ஆயுத வழிகொண்டு ஆவேசத்தோடு நின்ற சமயம் அதற்கு எதிராக வீறு கொண்டெழுந்து அஹிம்சை வழியில் போராடித் தனது இன்னுயிரையே தியாகம் செய்து, அந்த விடுதலைத் தீயிற்கு எண்ணெய் வார்த்தவர் அன்னை பூபதி.

உரிமைப் போராட்டத்தில் புதிய எழுச்சியையும் வேகத்தையும் விதைத்த அன்னைக்கு இன்று தமிழர் பிரதேசம் எங்கும் அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

அன்னையின் தளராத உறுதியும், இலட்சிய நோக்கும், விடுதலை உணர்வும், போராளியாக மாறும் மனப்பக்குவமும் சமூகத்தை வழி நடத்தவேண்டிய வழிகாட்டிகளுக்கு நல்ல முன்னுதாரணங்கள்.

அடக்குமுறைகளையும், அடாவடித்தனங்களையும, அந்நிய ஆக்கிரமிப்பையும் ஆயுதப்போர் கொண்டு மட்டுமல்லாமல், அஹிம்சைப்போர் கொண்டும் மோதலாம் என்ற காந்தீய தத்துவத்தை உலகுக்கு மீண்டும் புகட்டிய நவீன வீராங்கனை அன்னை பூபதி. ஆனால், காந்தீயத் தத்துவம், காந்தி தேசத்தை ஆண்ட அடக்குமுறையாளர்களுக்குப் புரியாமல் போனதால், காந்தியைப்போலல்லாது அவரது வழியைத் தொடர்ந்த அன்னை பூபதி, அஹிம்சைப் போரில் தம்முயிரைத் துறந்து தியாகியாகவேண்டியவரானார்.

அன்னை பூபதி ஓர் அரசியல்வாதியல்லர்; தீவிர அரசியலோடு தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டவரும் அல்லர்; பதவி மற்றும் அற்ப ஆசைகளுக்கு அடிமைப்பட்டவருமல்லர். அவர் முதுமையின் எல்லையைத் தொட்டு நின்ற ஒரு குடும்பப் பெண்ணாகவே - சராசரித் தாயாகவே வாழ்ந்தவர்; வளர்ந்தவர். என்றாலும், அநீதிகளை - அக்கிரமங்களை - எமது இனத்துக்கு எதிரான போர் அடக்குமுறைகளை - அவரால் சகிக்க முடியவில்லை. அதனால், ஒரு சாது கிளர்ந்தெழும் நிலை உருவாயிற்று. அநீதிக்கு எதிராக அவரது மனதில் கனன்ற தீ, மனக்கிளர்ச்சியால் பெரிய பூகம்பமாக வெடித்தபோது அது அவரை ஒரு வரலாற்றுக் கதாநாயகியாக்கியது; தியாக தீபமாக மாற்றியது.

ஆயுதப் போராட்டத்தில் - விடுதலை வேள்வியில் - வியக்கத்தக்க சாதனைகளை நிறைவேற்றிய புலிகள், அஹிம்சை வழியிலான சாத்வீகப் போரிலும் தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிருபித்திருக்கின்றார்கள்.

தலைவர் பிரபாகரன் தமிழகத்தில் நிலைகொண்டிருந்த சமயம் - எண்பதுகளில் - தமது இயக்கத்தின் தொலைத் தொடர்புக் கருவிகள் பறிக்கப்பட்டதை ஆட்சேபித்து சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஆனால், அவரின் போராட்டத்தின் நியாயத்தையும், உண்ணாவிரதப் போரின் பெறுமானத்தையும், மகிமையையும் உணர்ந்த தமிழக முதலர்வர் எம். ஜீ. இராமச்சந்திரன் போன்ற செயற்றிறன்மிக்க தலைவர்கள் அப்போது இருந்தனர். அதனால், தலைவர் பிரபாவின் போராட்டம் வெற்றி பெற்றது. இவருக்கு நியாயம் கிடைத்தது.

ஆனால், அதன் பின்னர் தண்ணீர்கூட அருந்தாமல் அஹிம்சைப்போர் புரிந்த தியாகி திலீபனும் அவன் வழியில் உண்ணாநோன்பிருந்து அரன் அடி சேர்ந்த அன்னை பூபதியும் புரிந்த தியாக வேள்வி, காந்தி தேசத்தின் காதில் ஏறாமல் போயிற்று. அதனால் அந்த வழிகாட்டிகளை நமது சமூகம் இழக்கும் அவல நிலைமை ஏற்பட்டது.

இப்போது மீண்டும் ஆயுதப் போராட்டம் நிறுத்தப்பட்டு அமைதி வழியிலான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சமாதான காலத்தில் எமது நியாயங்களை எடுத்துரைப்பதற்கு ஆயுத வழியினையாரும் நாட முடியாது. அஹிம்சை வழியையே பின்பற்ற வேண்டியிருக்கும்.

ஆயுதம் ஏந்தாமல் போராட்டம் நடத்தவேண்டிய காலம் மீண்டும் முகிழ்த்திருக்கின்றது. இக்காலத்தில் யுத்தட்டபணி போன்று பொங்கியெழுந்து போராடும் பாங்கு பொருந்தாதது. அஹிம்சையும், சகிப்புத் தன்மையும், அனைவரையும் அணைத்துப்போகும் பக்குவமும், பொறுமையும் இன்று அவசியமானவை.

இந்த வகையில் தியாகி திலீபன், அன்னை பூபதி போன்றோர் நமக்குப் படைத்துச் சென்ற வரலாற்று அனுபவப் பாடங்கள் இன்றைய நிலையில் நமது சமூகத்துக்கு கலங்கரைவிளக்கமாக வழிகாட்டத்தக்கவை.

---

### குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு தலைமறைவாகியுள்ள

# சந்தேக நபர்களைக் கைதுசெய்ய விடுதலைப் புலிகள் உதவி செய்வர்

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா உறுதியளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

குடாநாட்டில் குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு தப்பிச் சென்று வன்னிப் பகுதிக்குள் தலைமறைவாகும் சந்தேக நபர்களைக் கைதுசெய்ய விடுதலைப் புலிகள் உதவி செய்வார்கள் என்று புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா உறுதியளித்துள்ளார்.

கடந்த வாரம் அவரை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடிய ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் பொன். பூலோகசிங்கத்திடமே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்று பொன். பூலோகசிங்கம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டிற்குள் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, தீ வைப்புச் சம்பவங்கள் மற்றும் சமூகசீரழிவுகள் என்பன அதிகரித்து வருகின்றன. இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் சட்டத்தின் பிடியில் அகப்படாமல் தப்பிக் கொள்வதற்காக குடாநாட்டிலிருந்து முகமாலை ஊடாக வெளியேறி வன்னிப் பெருநிலப்பரப்பில் தலைமறைவாகி வாழ்கின்றார்கள்.

இவர்களது இத்தகைய செயல்களால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களின் செயற்பாடுகள், வழக்கு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சரியான சட்டப்பரிகாரங்களை வழங்கமுடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இக்குறைபாட்டை நீக்கி நீதிமன்ற செயற்பாடுகள் சீராக செயற்படவும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, பாதிக்கப்படும் மக்களுக்குச் சரியான விமோசனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இவ்விடயத்தில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. இதனால், இந்த விடயம் தொடர்பாக ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்க செயலாளர் விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பராவை கடந்த வாரம் வன்னியில் சந்தித்து யாழ்.குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி விரிவாக எடுத்துக்கூறினார்.

அவற்றையெல்லாம் மிகுந்த அக்கறையோடு செவிமடுத்த நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, பொதுமக்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையில் யாழ்.குடாநாட்டிற்குள் குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு வன்னிப் பகுதிக்குள் தலைமறைவாக வாழும் சந்தேக நபர்களை கைதுசெய்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாகக் கையளிக்கத் தாம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். குடாநாட்டு மக்களது துன்ப துயரங்களையும் நீக்க விடுதலைப் புலிகள் எப்போதும் பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பிரிவின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நீதி நிர்வாகப் பிரிவின் தலைமை நீதியாளர் ஒப்பிலான், நீதியாளர் இசையமுதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ம)

---

# கொழும்புத்துறை அம்மன் ஆலயத்தில் வெண்கல விக்கிரகங்கள் திருட்டு

கொழும்புத்துறை,ஏப்.19

கொழும்புத்துறை கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்த பெறுமதிமிக்க விக்கிரகங்கள் நேற்றுமுன்தினம் திருட்டுப்போயுள்ளன.

இந்த ஆலயத்தில் தொன்றுதொட்டு வணங்கப்பட்டு வந்த வெண்கலத்தினாலான அம்மன் சிலை, பிள்ளையார் சிலை மற்றும் திருவாசி என்பனவே இவ்வாறு திருட்டுப் போயுள்ளன என ஆலயப் பரிபாலகர் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் இந்த ஆலயத்துக்குச் செல்ல படையினர் அனுமதி வழங்காத போதிலும் தாம் இடையிடையே மாற்று வழியூடாக ஆலயத்துக்குச் சென்று வந்ததாகவும் -

இறுதியாக கடந்த புதுவருடத்தன்று ஆலயத்துக்குச் சென்றபோது மேற்படி விக்கிரகங்கள் இருந்தன என்றும் - பரிபாலகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

---

# சிறுவர் தொடர்பாடல் குறித்து கண்டியில் பயிற்சிப் பட்டறை

## யாழ். சிறுவர்களும் பங்கேற்பர்

யாழ்ப்பாணம்,ஏப்.19

சிறுவர்களின் எதிர்காலத் திட்டமிடலுக்காக, 'சிறுவர்களுக்கிடையிலான தொடர்பாடல்' என்ற தொனிப்பொருளிலான நான்கு நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை கண்டி, குண்டகசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில், யாழ்ப்பாணத்தின் எட்டுப் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 21 சிறுவர்கள் உட்பட 26 பேர் பங்குபற்றுகின்றனர். மேலும் அநுராதபுரம், மணலாறு, மன்னார், திருகோணமலை, கொழும்பு, எல்பிலிப்பிட்டிய, மட்டக்களப்பு, கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் நூறு சிறுவர்களும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்கின்றனர்.

பிரித்தானியப் பேரவை மற்றும் இலங்கை சிறுவர் பாதுகாபபு அமைப்பு என்பன இணைந்து இப்பயிற்சிப் பட்டறைக்கு அனுசரணை வழங்குகின்றன. சிநேகபூர்வமான - பொருத்தமான சூழலில் அறிவினைப் பகிர்ந்துகொள்வதற்கும், தொடர்புகளினை மேற்கொள்வதற்கும், தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதனூடான சந்தர்ப்பங்களினை கிராமிய மற்றும் பின்தங்கிய சிறுவர்களுக்கு வழங்குவதுமே இப்பயிற்சிப் பட்டறையின் பிரதான நோக்கமாகும்.

இப்பயிற்சிப் பட்டறையில் கண்காட்சி, சுவரோவியக்காட்சி, திட்டமிடல் குழுக் கலந்துரையாடல்,சம்பாஷித்தல் மற்றும் வலைப்பக்க வெளியீடு (Web Pages) போன்றவற்றுடன் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

பயிற்சிப் பட்டறையின் இறுதிநாளான எதிர்வரும் 25ஆம் திகதி கண்காட்சியில் வைக்கப்படும் பொருள்களில் தேர்ந்தெடுக்கப்படும் அதிசிறந்த படைப்புக்கள், ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இடம்பெறும் உலகளாவிய துறைத் திட்டக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

- இவ்வாறு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். அலுவலக நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஜெ.தற்பரன் தெரிவித்தார். (எ-9)

---

### அரச அலுவலகங்களில்

# நேரப்பதிவு இயந்திரங்களை பொருத்த நடவடிக்கை எடுக்குக!

## அமைச்சர் அலுவிகார அவசரப் பணிப்பு

கொழும்பு,ஏப்.19

அரச அலுவலகங்களில் வரவுப் பதிவேடுகளுக்குப் பதிலாக உடனடியாக நேரப்பதிவு இயந்திரங்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அலுத் அலுவிகார, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரச அலுவலகங்களுக்கு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உரிய நேரத்துக்கு வருகை தருவதில்லை.

இதனால், அரச அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அரச அதிகாரிகளின் கடமைகள் சரிவர இடம்பெறாமைக்கு வரவுப் பதிவேடுகளில் உள்ள குறைபாடுகளே காரணம். தவறாக நேரங்களைப் பதிவுசெய்யும் அரச அதிகாரிகள் தமது கடமையைச் சரிவரச் செய்யாது தப்பித்துக் கொள்கின்றனர்.

இதனைத் தவிர்ப்பதற்கு அரச திணைக்களங்கள், அலுவலகங்கள் முதலானவற்றில் நேரப்பதிவுக் கருவிகள் பொருத்தப்படுதல் அவசியமானது. இதன் மூலம் பல்வேறு சிக்கல்களை தவிர்த்துக்கொள்ளலாம் - என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-ரி-12)

**நாளை**

சித்திரை 07
ஞாயிற்றுக்கிழமை
20.04.2003
திதி : சதுர்த்தி
பிற்பகல் 4.46வரை
நட்சத்திரம் : கேட்டை
பின்னிரவு 3.45 வரை
சதுர்த்தி விரதம்
உயிர்த்த ஞாயிறு
சுபநேரம் : 9.02-10.32
ராகுகாலம் : 4.32-6.02
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

ஒரு பேராம்பேறி இளைஞன் வயதுமுதிர்ந்த பிச்சைக்காரனுக்குச் சமமானவனாவான்.

---

# நெற்செய்கை நிலங்களிலுள்ள கண்ணிகளை அகற்றித் தாருங்கள்

## மாணாவழை சனசமூக நிலையம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.19

மட்டுவில் மாணாவழைப் பகுதியில் உள்ள நெற்செய்கை நிலங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் ஆகியவற்றை அகற்றித்தருமாறு யாழ்.அரச அதிபருக்கும் 'ஹலோ ட்ரஸ்ட்' அமைப்புக்கும் மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணாவழைப் பகுதியில் பல ஏக்கர் நெற்செய்கை நிலங்கள் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாகச் செய்கை பண்ணப்படாது உள்ளன. மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டதை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள விளையாட்டு மைதானப் பகுதியிலும் கண்ணிவெடிகள் உள்ளதாகச் சந்தேகிக்கப்படுவதால் அவற்றையும் அகற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ம-10)

---

# போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கப் பிரதிநிதிகள் குழு வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.19

கண்டியில் இயங்கிவரும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

இக்குழுவினர் குடாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன் பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர்.

23ஆம், 24ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்கு யாழ். பீச் இன் ஹோட்டலில் 'மனதை ஆற்றுப்படுத்தல்' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள கலந்துரையாடலிலும் இக்குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி குழுவினர் இங்கு வரும்வழியில் கிளிநொச்சிக்குச் சென்று அங்கும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (ம-10)

## புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி
## கந்தசுவாமி கோவில்
## விசேட கலந்துரையாடல் கூட்டம்
## 20-04-2003

07.05.2003 இல் நடைபெறும் வருடாந்த மஹோற்சவம் பற்றிய மேற்படி கலந்துரையாடல் கூட்டம் நாளை (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றலில் ஆலய பரிபாலனசபைத தலைவர் திரு. த.தவராசா அவர்கள் தலைமையில் நடைபெறும். பரிபாலன சபை அங்கத்தவர்கள், திருவிழா உபயகாரர்கள், மாதப்பூசை உபயகாரர்கள், கந்த சஷ்டி, நவராத்திரி உபயகாரர்கள், விசேட பூசை உபயகாரர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பமுடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்.

புங்குடுதீவு. (16931)

## துயர் பகிர்கின்றோம்

எமது நண்பர் திரு. விஜயரட்ணம் (சுன்னாகம்) அவர்களின் பாசமிகு துணைவியார்

**திருமதி சிவமணி விஜயரட்ணம்**

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

(16930) கொக்குவில் நண்பர்கள்.

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

வீரப்பிறப்பு 31 - 03 - 1973

வீரச்சாவு 19 - 04 - 2000



**மேஜர் தேசிகன் (நீதியாளர்)**

(கந்தையா லோகநாதன்)

காலத்தின் தேவையறிந்து கல்வி தனை இடைநிறுத்தி
களமாடச் சென்றவனே! - எங்கள் கண்களில்
எப்படியும் தெரிவாயென்று ஏங்கி இருந்தோம்!
அத்தனை கண்களிலும் கண்ணீராய் மலர்ந்தாயே!
ஆண்டுகள் மூன்றல்ல மூவாயிரம் தான் சென்றாலும்
என்றும் உன் நினைவு மாறாது.

6 ஆம் வட்டாரம், வேலணை மேற்கு. (16865)

உன்னைக் காணத் துடித்த அம்மா, அப்பா, உறவுகள்.

## 3ம் ஆண்டு நினைவில்...

தோற்றம் 16 - 05 - 1950

மறைவு 21 - 04 - 2000



அமரர் திருமதி

**சண்முகமலர் தர்மராஜா**

(புனிதம், இணுவில் மேற்கு)

திதி - 19.04.2003

*நெஞ்செல்லாம் உன்நினைவாய் நாம்*
*தினமும் உன் வழிகாட்டலுக்காய்...*

இணுவில் மேற்கு, சுன்னாகம்.

*ஏங்கிநிற்கும்,* கணவர், பிள்ளைகள்.

## சண்டிலிப்பாயில் தொழில்சார் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஏப்.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் முக்கிய இரண்டு துறைகளில பயிற்சி வழங்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் மரவேலை, கட்டுமானம் ஆகிய பயிற்சிகளே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறியினை மேற்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக தமது பெயர் விவரங்களை கிராம அலுவலரின் சிபார்சுடன் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்ய வேண்டுமென சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா அறிவித்துள்ளார்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-100)

## பிரமாண வேலைத்திட்டத்துக்கு ரூபா 5 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஏப்.19

வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளவாலை புனித அந்தோனியார் புதிய சனசமூக நிலையம் அமைக்க ரூபா 2 லட்சத்து 50 ஆயிரமும் -

நவாலி வடக்கு தென்னிந்திய திருச்சபை வீதியை மீள்புனரமைக்க ரூபா 2லட்சத்து 50 ஆயிரமும் - ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ-185)

## சட்டவிரோத மின்பாவனை கண்டுபிடிப்பு!

சண்டிலிப்பாய், ஏப்.19

சண்டிலிப்பாய் மத்தியிலுள்ள வீடொன்றில் நீண்டகாலமாக சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்தமை மின்சாரசபை அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமையன்று இதனைக் கண்டுபிடித்த மின்சார சபையினர் இதற்குப் பயன்படுத்திய வயர்களையும் மின் உபகரணங்களையும் பறிமுதல் செய்தனர். இனிமேல் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர் மின்சார சபை அலுவலர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டார். (ஒ-135)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வந்து சேர்ந்தது

தென்மராட்சி, ஏப்.19

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வழங்கவென புதிய அம்புலன்ஸ் வண்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த அம்புலன்ஸ் வண்டி விரைவில் சாவகச்சேரி வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் அம்புலன்ஸ் வண்டியும் ஜெனரேற்றரும் வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியினர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## யாழ்.கல்வி வலய அதிபர், ஆசிரியர்களுக்கு விசேட கலந்துரையாடல்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல்கள் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

யாழ்.கல்விக்கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்திலும்-

கோப்பாய் மற்றும் நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி முறையே காலை 10 மணிக்கு கோப்பாய் நாவலர் வித்தியாலயத்திலும்-

பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையிலும் நடைபெறவுள்ளன. இதில் அனைத்து அதிபர், ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-10)

சதாவதானி **நா.கதிரைவேற்பிள்ளை** அவர்களின்

## 96ஆவது ஆண்டு நினைவு விழா - 2003

காலம்: இன்று (19.04.2003) சனி மாலை 6.30 மணி
இடம்: சதாவதானி அரங்கு
தலைவர்: **திரு.அ.துரைசிங்கம** (நிலையத் தலைவர்)
முதன்மை விருந்தினர்: பேராசிரியர் **சு.மோகனதாஸ்**
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்:
**திரு.வி.அருளானந்தம்**
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்)
**திரு.கை.கவிஅன்பன்**
(பொறுப்பாளர் - கல்விக்கழகம், யாழ்ப்பாணம்)
**திரு.க.தம்பையா** (பிரபல எழுத்தாளர்)

### நிகழ்ச்சிகள்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கமும் தமிழ்த்தாய் வாழ்த்தும்
- வரவேற்புரை: **திரு.ந.குகநாதன்** (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
- ஆசியுரை: **திரு.நா.சந்திரசேகரம்** (ஓய்வுபெற்ற அதிபர், யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை)
- தலைமையுரை:
- குருபூசைத்தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்கள்
- பரிசில் வழங்கல்: **திருமதி புஸ்பராணி மோகனதாஸ்**
- சிறப்புச் சொற்பொழிவுகள்
  "புலமையறாப் புலோலி" பண்டிதர் வீ.பரந்தாமன்
  "தமிழ் தந்த பண்பாடு" திருமதி தனலக்குமி சிவானந்தம் B.A. (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியர்)
- சிறுவர் இசை நடன நிகழ்வுகள்
- வில்லிசை "பட்டினத்தார்"
  *கலாபூஷணம் சின்னமணி க.நா.கணபதிப்பிள்ளை குழுவினர்*
- நன்றியுரை

"தெள்ளு தமிழினை அள்ளிச் சுவைத்திட
வெள்ளமெனத் திரண்டு வாரீர்"

*சதாவதானி கதிரைவேற்பிள்ளை ச.ச.நிலையம், தம்பசிட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.*

தி.சோமாஸ்கந்தராசா செயலாளர்.

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:-

**சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்**
புலோலி மேற்கு.
(16912)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 09 - 1929

உதிர்வு 12 - 05 - 1990



**அமரர் செல்லத்துரை வரதலிங்கம்**

(இளைப்பாறிய அதிபர், யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்)

திதி: 19.04.2003

தண்மதி நிகர்த்த அரவணைப்பும்
தாரகை போன்ற சான்றாண்மையும்
மிகாமனை யொத்த வழிகாட்டலும்
மேதினியில் நாம் வாழும்வரை துணையாகும்.

117/4, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (16894)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### R.பத்மராஜா

(இளைப்பாறிய காட்டு இலாகா அதிகாரி, கல்முனை)

R.பத்மராஜா 14-04-2003 கனடாவில் அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னார் சிவலோகமணியின் அன்புக் கணவரும் ஹரியின் பாசமிகு தந்தையும் புஸ்பராஜா, யோகராஜா, புஸ்பராணி, பத்மராணி, மகாராஜா, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசன், வெஸ்லிகுலம், சந்திரமணி நடராஜா ஆகியோரின் மைத்துனரும் வினிதாவின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-04-2003) சனிக்கிழமை ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Harry Pathmarajah,
83, Grey Beaver, Trail,
Scarborough, Ontario. MIC - N7.
T.P. No. (416) 2810745.

தகவல்: R.யோகராஜா
முகாமைத்துவ பணிப்பாளர்
General Inks (Ltd.)

(C27446)

# போராட்டமே வாழ்க்கையாகிப்போன வடக்கு-கிழக்கு தொண்டர் ஆசிரியர்

தமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய எதனையுமே போராடித்தான் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற தலைவிதி தமிழ் மக்களுக்கு இன்று நேற்றல்ல நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது.

அடிப்படை வசதிகள்முதல் அரசியல் உரிமைகள் வரை எதுவுமே போராட்டத்தின் பின்னர்தான் தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது - வழங்க சம்மதிக்கப்பட்டிருக்கிறது - என்ற உண்மை வெளிப்படையானது.

இதனால், காலத்துக்குக் காலம் பல்வேறு அஹிம்சைப் போராட்டங்கள், மறியறபோராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் என பல வடிவங்களிலான போராட்டங்களை முன்னெடுத்து அவற்றில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள் தமிழர்கள்.

அந்த வகையில் தற்போது வடக்கு - கிழக்கிலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் தமது கோரிக்கை நிறைவேற போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

யுத்த நடவடிக்கைகள் பெருமளவில் இடம்பெற்ற காலத்தில் வடக்கு-கிழககில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது. அந்தப் பற்றாக்குறையை ஓரளவுக்காவது நிவர்த்தி செய்யும் நோக்குடன் ஆசிரியப் பணிபுரிய முன்வந்தவர்கள் தொண்டர் ஆசிரியர்கள்.

**செய்திக் கட்டுரை**

இடப்பெயர்வு, வறுமை என்பவற்றுக்கு மத்தியிலும் என்றாவது ஒரு நாள் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நோக்கில் மாதாந்தம் ரூபா 500க்கும் குறைவான ஊதியத்துடன் வருடக்கணக்கில் சேவை புரிந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டிருப்பதாக கல்விசார் சமூகம் ஒப்புக்கொண்டுள்ளது.

இந்தத் துரோகத்தனத்தால் வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டாலும்கூட அவர்களில் யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் ஒருபடி அதிகமாகவே பாதிக்கப்பட்டார்கள் - ஏமாற்றப்பட்டார்கள் என்பது உண்மையே.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் தொண்டர் ஆசிரியர்கள் மேற்கொண்ட பல போராட்டங்களின் பின்னர் அவர்களில் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்குத் தீமானிக்கப்பட்டது. ஆனால், அப்போதைய அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருந்த சில அரசியல்வாதிகளின் செல்வாக்கும் கைவரிசையும் தொண்டர் ஆசிரியர் நியமனத்திலும் புகுந்து விளையாடின. தமது அரசியல் நோக்கங்கள் - நடவடிக்கைகளுக்கு துணை நின்றவர்கள் மற்றும் தமக்கு 'வேண்டியவர்களுக்கு' தொண்டர் ஆசிரியர்கள் என்ற பெயரில் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொடுத்தனர் அந்த அரசியல்வாதிகள்.

ஒருநாள் கூட தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றாதவர்கள் பலரும் இவ்வாறு நியமனம் பெற்றுக்கொண்டனர். இதனால் நீண்டகாலமாக சிறு தொகை ஊதியத்துடன் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் பலர் நியமனம் வழங்கப்படாமல் வஞ்சிக்கப்பட்டனர்.

இருந்தாலும் கூட அப்போது குடாநாட்டில் தொடர்ந்தும் நிலவிவந்த ஆசிரியர் பற்றாக்குறையை அதனால் மாணவர் சமூகத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை உணர்ந்துகொண்டு தமது பணியை தொண்டர் ஆசிரியர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்தார்கள்.

ஆனால், அவர்களுக்கு இன்று வரை நிரந்தர நியமனமும் வழங்கப்படவில்லை என்பதுதான் மிகவும் வேதனை தருகின்ற விடயமாகும். தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை.

அரசுடன் மட்டுமல்ல வறுமையுடனும் குடும்ப கஷ்டங்களுடனும் கூட போராடவேண்டிய பரிதாப நிலைமை அவர்களுக்கு.

போராடிப்போராடி அவர்களின் வயதும் வாழ்க்கைச் செலவுகளும் உயர்ந்துகொண்டதே ஒழிய நியமனம் வழங்கப்பட்டதாக இல்லை.

கடந்த வருட முற்பகுதியில் ஆட்சிப்பீடம் ஏறிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமாவது தமது விடயத்தை மனிதாபிமானத்துடன் நியாயபூர்வமாக அணுகும் என்று எதிர்பார்த்திருந்தார்கள் அவர்கள்.

**அற்புதன்**

இப்பொழுது இருக்கும் தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்படும் என்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்த அரசாங்கமும் அறிவித்தது.

அந்த அறிவிப்பை நம்பி திருமணம் உட்பட தமது வாழ்க்கைப்படி நிலைகளில் முக்கியமான முடிவுகளைக்கூட எடுத்துவிட்டார்கள் பல தொண்டர் ஆசிரியர்கள்

ஆனால், நியமனம் வழங்குவதற்கான சிபார்சை கல்வி அமைச்சு செய்திருந்தும் இந்த நியமனங்களுக்கான சம்பளம் வழங்க, பணம் இல்லை என்று கைவிரித்தது அரச திறைசேரி.

திறைசேரியில் நிதிப் பற்றாக்குறை நிலவுவதாகக் காரணம் காட்டி தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இருந்தாலும், விரைவில் தமக்கு நியமனக் கடிதங்கள் கிடைத்துவிடும் என்ற திடமான நம்பிக்கையுடன், ஆவலுடன் இருந்த அவர்களுக்கு அண்மையில் அரசினால் வெளியிடப்பட்ட மற்றுமோர் அறிவிப்பு பேரிடியாய் அமைந்துவிட்டது.

“வடக்கு - கிழக்கில் உடனடியாக 2000 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள். அவர்களில் ஆயிரம்பேர் பட்டதாரிகள். மிகுதி ஆயிரம் பேர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் விரைவில் அனுப்பிவைக்கப்படும்" என்பதுதான் அந்த அறிவிப்பு.

அந்த அறிவிப்பு வெளியாகி சில நாள்களுக்குள் நியமனம் பெற்றவர்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன. ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களில் ஆயிரம் பேருக்கும் நியமனக் கடிதம் கிடைத்தது.

அவர்களில் பலர் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, பட்டம் பெற்று வெளியேறியவர்கள் என்றும் தெரிய வந்திருக்கிறது.

ஆனால், தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் குறித்து எந்தக் கருத்தும் வெளியிடப்படவில்லை. அதனால் இப்பொழுது மீண்டும் போராட வேண்டிய நிலை அவர்களுக்கு. இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் உட்பட கல்விசார் அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்கள் பலவும் தொண்டர் ஆசிரியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களின் முன்பாகவும் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாகவும் தொண்டர் ஆசிரியர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக கலந்துரையாடினர். அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது

தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அண்மையில் பிரதமருடன் சந்தித்து இதுகுறித்துப் பேச்சு நடத்தியதாகவும் - அந்தப் பேச்சுக்களை அடுத்து மேலும் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு பிரதமர் சம்மதித்துவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆனால், நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களின் கைகளில் கிடைத்து - அவர்கள் கடமையில் இணைந்து கொள்ளும்வரை இந்த வாக்குறுதியை நம்பியிருக்கமுடியாது.

அரசியல்வாதிகளால் அள்ளி வழங்கப்படுகின்ற வாக்குறுதிகள் பின்னர் புஸ்வாணமாகிப்போவது ஒன்றும் புதிய விடயமல்ல என்பதும் கவனிக்கப்படவேண்டியதே. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களும் இத்துடன் தமது கடமை முடிந்துவிட்டதாக எண்ணி பேசாமல் இருந்துவிடாமல் தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்கள் உறுதிப்படுத்தப்படும்வரை நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக உரத்துக் குரல் எழுப்பவேண்டும். அரசுக்குப் பல்வேறு வகையிலும் அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி தொண்டர் ஆசிரியர்களின் கடந்த கால சேவைகளையும் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் அரசுக்கு எடுத்துரைக்கவேண்டும்.

தவிர வலய, மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உயர் கலவி அதிகாரிகளும் இந்த விடயத்தில் பூரண அக்கறை எடுத்து நிலைமையை கல்வி அமைச்சு மட்டத்தில் விளக்கக்கூறவேண்டும். இதுவரை காலமும் தொண்டர் ஆசிரியர்களுக்கு அவ்வப்போது கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பனவற்றை நடத்தி சான்றிதழ்களையும் வழங்கி அவர்களின் சேவையை ஊக்குவித்த வலயக் கல்விப் பணிமனைகள் இப்போது ஏனோ தானோ என்ற போக்கில் மௌனமாயிருப்பது மன வருத்தத்துக்குரியது.

தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவிருப்பதாக அறிவித்திருக்கும் அரசாங்கம் முன்னைய தடவைகள் போல எதிர்பார்ப்பை ஏற்படுத்திவிட்டு ஏமாற்றத்தைக் கொடுத்துவிடும் நடவடிக்கையாக இதனை மாற்றிவிடக் கூடாது.

இது ஒருபுறமிருக்க, தொண்டர் ஆசிரியர்களாக புதிதாக எவரையும் இணைத்துக்கொள்ளவேண்டாம் எனறு கல்வி அமைச்சு அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும அறிவித்திருந்தது.

ஆனால், அந்த அறிவிப்பையும் மீறி சில அரசியல்வாதிகளின் சிபார்சுக்கமைய சில பாடசாலைகள் தொண்டர் ஆசிரியர்களை புதிதாக இணைத்துக்கொள்வதில் ஈடுபட்டிருக்கின்றன. இதன்மூலம் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நீண்டகாலம் பணியாற்றிய பலர் இருக்கக்கூடிய நிலையில் அரசியல் செல்வாக்கின்மூலம் ஒருசில மாதங்கள் மட்டும் பணிபுரிந்தவர்களுக்கும் ஒருநாள்கூட பணியாற்றாதவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டதுபோன்ற நிலைமை இந்த அரசாங்கத்தின் நியமனத்திலும் ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணத்தோன்றுகிறது.

அப்படியான ஒரு நிலை ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்வது பாடசாலைகள் மற்றும் கல்வி வலயங்களின் கடமையாக இருக்கிறது.

எனவே, உடனடியாக தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவேண்டும். அந்த நியமனங்களில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது. இதுவே போராட்டம் நடத்தும் தொண்டர் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பாகும். ★

# அமைச்சர் ஹக்கீம்-மஹ்ரூப் எம்.பி. மோதலால் சமாதான விரோத சக்திகளுக்கே வாய்ப்பு

## பிரதமருக்கு அமைச்சர் காதர் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.19

மூதூர் சம்பவம் சமாதான விரோத சக்திகளுக்கு ஒரு வாய்ப்பாக மாறுவதற்கு இடமளிக்காமலும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாவண்ணமும் அனைவரும் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம்.ஏ.காதர் மூதூர் சம்பவங்கள் தொடர்பாக பிரதமரிடம் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

- நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே ஐக்கிய தேசிய முன்னணிக்கு தேர்தலில் மக்கள் அமோக ஆதரவளித்து அதனை வெற்றியடையச் செய்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியன எமது அரசில் அங்கம் வகிக்கின்றன. இக்கட்சிகளுக்கிடையில் எதுவிதமான ஏற்றத்தாழ்வுகளும் இல்லை.

மூதூரில் கடந்த 31 ஆம் திகதி கடத்திச்செல்லப்பட்டனர் எனக் கருதப்படும் இளைஞர்கள் இருவரில் ஒருவரின் தாயார் தற்கொலை செய்து கொண்டதை அடுத்து மூதூரில் பதற்றம் ஏற்பட்டது.

அமைச்சர் ஹக்கீம் 15ஆம் திகதி நாடு திரும்பியதும் நாம் அனைவரும் மூதூர் சென்றோம். அங்கு ஏற்பட்டிருந்த பதற்றத்தைத் தணித்து, அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் வெற்றிகண்டோம்.

பொலீஸ்மா அதிபரும் முப்படைகளின் உயர் அதிகாரிகளும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் எம்முடன் இருந்தனர்.

அன்றைய தினம் மாலை மூதூர் அக்கரைச்சேனை பள்ளிவாசலுக்கு அருகே நடைபெற்ற சம்பவம் மீண்டும் பதற்றம் ஏற்பட ஏதுவாயிற்று.

தனது பேச்சுக்கு முன்னால் இடம்பெற்ற ஆவேசமான பேச்சுக்கள் குறித்து எம்.ஏ.எம்.மஹ்ரூப் எம்.பி. கருத்துத் தெரிவித்தார். இவரது கருத்துக்களை ஒவ்வொரு நபரும் வெவ்வேறு விதமாக வியாக்கியானம் செய்தனர்.

வார்த்தைப் பிரயோகங்கள் உக்கிரமுற்று கைகலப்பு ஏற்படும் நிலைக்கு வந்துவிட்டது. பள்ளிவாசலுக்கு அருகே இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என்பதே எனது கருத்தாகும். பின்னர் பாதுகாப்புப் பிரிவினரின் தலையீட்டால் நிலைமை மீண்டும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்”க்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தின என்றே நான் கருதுகின்றேன். - என்றுள்ளது. (ஐ)

# அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகள் அபிவிருத்திப் பணிகளில் புறக்கணிப்பு!

## யாழ்.அரச அதிபர் கூறுகிறார்

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரியாலை, கொழும்புத்துறை, குருநகர் பகுதிகளும் முக்கியமானவை. தென்மராட்சியுடன் ஒத்த அழிவுகளே இங்கும் இடம்பெற்றுள்ளன. ஆனால், அரசியல்வாதிகளும் சரி, கடந்த காலங்களில் இங்கு பணி புரிந்துவந்த அதிகாரிகளும் சரி இப்பகுதிகளின் அபிவிருத்தியில் அக்கறை காட்டவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

அரியாலையில் இடம்பெற்ற சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரியாலை சனசமூக நிலைய விசுவநாதன் அரங்கில் புத்தாண்டு தினத்தன்று விழாத் தலைவர் ஆ. தேவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய அரச அதிபர் மேலும் கூறியதாவது:-

'நான் பதவிக்கு வந்தபோது மாம்பழம் சந்திக்கு அப்பால் செல்ல முடியாதிருந்தது. இராணுவத்தை அகற்ற அரசியல்வாதிகளோ, அரச நிர்வாகமோ நடவடிக்கை எடுக்கவில்லை. நான் மேற்கொண்ட பகீரதப்பிரயத்தனத்தினாலே இன்று இப்பகுதியில் மக்கள் குடியமர்ந்துள்ளனர்.

' அடுத்த பாடசாலைத் தவணை ஆரம்பிக்கும்போது அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் என்பன சொந்த இடங்களில் இயங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய மக்களின் உயர்வே எனது இலட்சியம். இவ்வாறான எனது அபிவிருத்திப் பணிகள் வழியாக நிரந்தரமான எதிர்காலத்தைக் கட்டி எழுப்பி மக்களுக்காக உழைப்பதே எனது குறிக்கோள் என்று தெரிவித்தார்.

கடந்த சாதாரண தரப் பரீட்சையில் 10 பாடங்களிலும் விசேட சித்தியடைந்த அரியாலையைச் சேர்ந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் கோ.கார்த்திகேயன் உயர்தரப் பரீட்சையில் 3 ஏ பெற்ற இ.சுதர்சன் மற்றும் பல துறைகளைச் சேர்ந்த சேவையாளர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-30)





ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறப் பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தியடைப்பு கிராம அலுவலர் ம.ஜெ.ஜெயதரன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் - மாணவிகள் வழங்கிய கலைநிகழ்வு ஒன்றையும் படங்களில் காணலாம். பாடசாலை ஆசிரியை செல்வி யோ. டயானியும் படத்தில் காணப்படுகிறார்.
(படம்:- கொக்குவில் செய்தியாளர்)

## தொல்புரம் கிழக்கு
## விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்
### "சமூகச்சுடர் - 09" கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடும் பெரியோர்களை கௌரவித்து பட்டம் வழங்கலும்



காலம்: நாளை (20-04-2003)
ஞாயிறு பி.ப. 3.00 மணி
இடம்: நிலைய முன்றில்
தலைமை: திரு. தி. உதயசூரியன் J.P.
(நிலையத் தலைவர்)
வரவேற்புரை: திரு. ச. கைலாசநாதன்
(நிலைய உப தலைவர்)
ஆசியுரை: சிவஸ்ரீ சு.சுந்தரராஜக்குருக்கள்
(தொல்புரம்- வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திருமதி K.சிவசோதி
(ச.ச.அ. உத்தியோகத்தர், வலி.மேற்கு)
திரு.ம. ஸ்ரீமுருகவேள்
(கி.உ. தொல்புரம் கிழக்கு)



பிரதம விருந்தினர்:
உயர்திரு. இ.த. விக்னராஜா
(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)
வெளியீட்டுரை: திரு.மு.சிவராசா
(உதவிப் பிரதேச செயலர், வலி. மேற்கு)
மதிப்பீட்டுரை: சைவப் புலவர் திரு.சு.செல்லத்துரை
(இளைப்பாறிய அதிபர்)

திருமுறைச் செம்மல் என்னும் பட்டம் பெறுபவர்:
உயர்திரு. மு. கிருஷ்ணபிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியரும், நிலைய போஷகரும்)

சமூகச் செம்மல் என்னும் பட்டம் பெறுபவர்:
உயர்திரு. மு. நமசிவாயம்
(இளைப்பாறிய உப அதிபரும், நிலையப் போஷகரும்)

வாழ்த்துப்பா பாடி வழங்குபவர்:
திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி
(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்)

பாராட்டுரைகள்:
திரு.க.வாமதேவன்
(செயலாளர், தொ.மு.ஐ.ப.ச.சங்கம்)
திரு.ச.இராமலிங்கபிள்ளை
(உப தலைவர், மடத்தடி பிள்ளையார் கோயில்)
திரு.ச.திருச்செல்வம்
(தொ.வி.ச.நிலையம்)
திரு.கு.பா.விஜயகுமார்
(பொருளாளர், துரையன்வளவு பிள்ளையார் கோயில், பரிபாலனசபை)
திரு.சி.சிவநாதன்
(பொருளாளர், மடத்தடி பிள்ளையார் அன்னதான சபை)

பதிலுரை:
விழா நாயகர்கள்

நன்றியுரை:
திரு. த. மாலசுதன்
(நிலைய செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
- நிர்வாகம்

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:
மகாலட்சுமி களஞ்சியம்
மடத்துவ் பிள்ளையார் கோவிலடி, தொல்புரம் கிழக்கு.
கேதீஸ் களஞ்சியம்
பிரதான வீதி, வழக்கம்பரை, சுழிபுரம்.
திரு ஸ்ரோர்ஸ்
(16951) வழக்கம்பரை, தொல்புரம்.

## கடை/வீடு வாடகைக்குத் தேவை

கொடிகாமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பல் வைத்திய நிலையம் ஒன்றிற்கு கொடிகாமம் மத்திய நிலையத்தை அண்மித்த பகுதியில் கடை அல்லது இந்நிலையத்திற்கு பொருத்தமாக அமைந்துள்ள வீட்டின் முன் அறை (Office room) உடனடியாக வாடகைக்குத் தேவை.

தொடர்பு:
விளம்பர இல.1854
மே/பா. உதயன
(16958)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

### அமரர் திருமதி செல்லம்மா குமாரசாமி
### (குரும்பசிட்டி)

கடந்த 18-03-2003 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதலும், உதவிகளும் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், இன்று (19-04-2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மிகுந்த அன்புடன் அழைக்கின்றோம்.

*கே.கே.எஸ்.வீதி,*
*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.*
(16948)
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

## வடலியடைப்பில் கலாசார மண்டபம்

சண்டிலிப்பாய்,ஏப்.19

வடலியடைப்பு ஐயனார் ஆலயத்திற்கு அருகில் கலாசார மண்டபம் ஒன்றை நிறுவ ஆலய பரிபாலன சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி மண்டபத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொண்டார்.

மண்டபத்திற்கான அடிக்கல்லை ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.கந்தசாமி நட்டு வைத்தார்.

ஆலயத்திற்கு சமீபத்தில் நிறுவப்பட்ட தண்ணீர்த் தாங்கிக்கான நிறுவுநர் நினைவுக்கல்லை அமைச்சர் .மகேஸ்வரன் திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார். (எ-135)

## சுழிபுரம் பாடசாலையில் ஞாபகார்த்த மண்டபம் நிறுவ ஏற்பாடு

சண்டிலிப்பாய்,ஏப்.19

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அமரர் க.விருத்தாசலத்தின் ஞாபகார்த்தமாக வித்தியாலயக் காணியில் மண்டபம் ஒன்றை நிறுவுவதற்கு அன்னாரின் குடும்பத்தினர் முன் வந்துள்ளனர்.

இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வித்தியாலய அதிபர் ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.(எ-135)

## மாநகர சபைப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.மாநகர சபைப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் திகதிகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் 12.30 மணிவரை வண்ணார் பண்ணை சிகிச்சை நிலையத்திலும் பிற்பகல் 2.00 மணிமுதல் 4.30 மணி வரை ஆத்திசூடி சனசமூக நிலையத்திலும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 8.30 மணிமுதல் 12.30 மணி வரை சென்.நிக்கலஸ் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணிவரை கொட்டடி சனசமூக நிலையத்திலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## மிருசுவில் மருந்தகம் முழுநேரம் இயங்கும்

தென்மராட்சி,ஏப்.19

மிருசுவில் மத்திய மருந்தகத்திற்கு நிரந்தர டாக்டர் நியமிக்கப்பட்டதையடுத்து மீண்டும் காலை 7.00 மணிதொடக்கம் மாலை 5.00 மணிவரை இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக தினமும் பி.ப1.00 மணிதொடக்கம் 5.00 மணிவரை மத்திய மருந்தகத்தில் வெளிநோயாளர் பிரிவு இயங்கி வந்தது.

கடந்த 15ஆம் திகதி தொடக்கம் இந்த மருந்தகத்திற்கு டாக்டர் விநாயகமூர்த்தி ஆறுமுகம் நியமிக்கப்பட்டதையடுத்து தினமும் இயங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## சைக்கிள் உரிமத்தகடுகள் விநியோகம்

சண்டிலிப்பாய்,ஏப்.19

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் இவ்வாண்டுக்கான சைகிள், மாட்டு வண்டில் ஆகியவற்றிற்கான உரிமத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் ஐந்து ரூபாவுக்கு வழங்கப்பட்ட சைக்கிள் உரிமத்தகடுகள் இவ்வருடம் பத்து ரூபாவுக்கு வழங்கப்படுகின்றன (எ-135)

## விற்பனைக்கு

PIONEER C.S 922A BOX
5 Way Speaker 16" 270 - W
மற்றும்
AMPLIFIER 340 - W
SONY 3.C.D SET 3100w
AUDIO - VEDIO
என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
கோ.கிருபாகரன்
இல.811, நாவலர் வீதி, அரியாலை.
(ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகில்)
T.P. 0777 - 272636
(16940)

# நினைவு நாள்



பிறப்பு 03 - 10 - 1933
இறப்பு 19 - 04 - 1996

## Dr. ஆறுப்பிள்ளை இராசநாயகம்

(இளைப்பாறிய உதவி வைத்திய மாவட்டப் பொறுப்பாளர்)
(அனுராதபுரம், பொலநறுவை)

மண்ணுலகை நீத்தாலும் - எங்கள்
மனவுலகில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் நினைவுகள்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்.

*பாணாவெட்டி,*
*தொல்புரம்*
(16938)
- பாசமிகு குடும்பத்தினர்.

# ஐந்தாம் வருட நினைவஞ்சலி





அமரர்
கார்த்திகேசு இராமலிங்கம்

திருமதி
இராமலிங்கம் தங்கம்மா

10.04.1922 ← உதிப்பு → 04.06.1927
15.04.1998 ← உதிர்வு → 06.05.1998

அன்பும் பண்பும் மிகுந்த தெய்வங்களே!
பாசத்தால் எமைக் காத்து அன்போடு வளர்த்து
பார்தனில் எமைத் தவிக்கவிட்டு விட்டு
சென்றீர்களோ?

*இ.இராசேந்திரம்,*
*நுணாவில் மேற்கு,*
*மடத்தடி, சாவகச்சேரி.*
(16949)
- குடும்பத்தினர்.

# நீங்காத நினைவலைகள்...

18 ஆம் ஆண்டு நினைவில்



அமரர்
மரியான்
இறப்பியல்பிள்ளை

தாய் மடியில் 12.08.1908
கர்த்தருக்குள் 25.05.1985

முதலாம் ஆண்டு நினைவில்



திருமதி
இறப்பியல்பிள்ளை
மாசில்லா

தாய் மடியில் 27.04.1921
கர்த்தருக்குள் 19.04.2002

உனக்குக் கொஞ்சம் பெலனிருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

*(வெளி 3:8)*

பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய்
இரக்கத்தின் இலக்கணமாய், பலவீனத்தில் பலமாய் இருந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு எத்தனை சென்றாலும்
உங்கள் நினைவு மறையாது.

*சி.டொமினிக்,*
*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*
(16947)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# காலவெள்ளத்தால் அழியாத தனிச்சரித்திரம் அன்னை பூபதி

**அன்னை பூபதியின் 15ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் முன்னேற்றம் கண்டுவரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. அறுபதுகளில் எழுந்த அஹிம்சை வழிப் போராட்டத்தில் பெண்கள் அலையலையாக அணி திரண்டனர். அதனை அடுத்து புலிகளின் தலைமையில் உருவகம் பெற்ற ஆயுதப் புரட்சிப் போராட்டத்திலும் பெண்கள் கணிசமான அளவு பங்களித்து வருகின்றனர். அனைத்து அடக்குமுறைகளுக்கு எதிராகவும் அணிதிரண்டு போராடிக்கொண்டிருக்கும் பெண்ணினம் வியக்கத்தக்க வகையில் மகத்தான அர்ப்பணிப்புகளை செய்து வருகின்றது.

இந்த வகையில் இந்த மண்ணுக்காக தம்மை அர்ப்பணித்த தியாகிகளுள் அன்னை பூபதி கால வெள்ளத்தால் அழியாத ஒரு தனிச்சரித்திரம்.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணிற் காலடி எடுத்து வைத்து, மக்களை அழித்து எமது போராட்டத்தை நசுக்கிக்கொண்டிருந்தவேளை, அன்னை பூபதி தனது அறப்போரை ஆரம்பித்தார். அன்னை பூபதியின் இப்போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின் கொதிப்பல்ல; ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளிப்பாடு.

### ஆதிக்கச்சுவடு பதிந்திருந்த வேளை

மிகவும் இக்கட்டான நெருக்கடியான சூழ்நிலையில் எமது தாயகப் பூமியின் மூலைமுடுக்கெல்லாம் அந்நிய இராணுவத்தின் ஆதிக்கச் சுவடுகள் பதிந்திருந்த வேளையில், சாதாரண மக்கள் எவரும் துணிந்து போராடத்தயங்கிய நேரத்தில் அன்னை பூபதி தனது அறப் போராட்டத்தினை நடத்தினார்.

தனது 58ஆவது வயதில் அவர் மேற்கொண்ட இந்தத் தியாகப் போராட்டம், அவரது மனஉறுதியையும தேசப்பற்றையுமே காட்டி நிற்கின்றது. போராட்டத்தைக் குழப்புவதற்கு இந்திய ஆக்கிரமிப்புப்படை எத்தனையோ மிரட்டல்கள், அச்சுறுத்தல்களை மேற்கொண்டபோதும் அவற்றிற்கெல்லாம் பணியாது அவர் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார். அவரது தியாகப் போராட்டம் பெண்ணினத்திற்கு எல்லாம் முன்னுதாரணமாக அமைந்தது.

### பெண்களை எழுச்சிபெறச் செய்தவர்

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக தமிழீழப் பெண்கள் எத்தனையோ அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளுக்குள் சிக்குண்டு தவித்த வேளையில், அன்னை பூபதி தனது அஹிம்சைப் போராட்டத்தினால் பெண்ணினத்தை எழுச்சி பெறச் செய்தார்.

ஒரு சாதாரண குடும்பப்பெண், வயோதிபத்தாய் மேற்கொண்ட இப்போராட்டம், அனைத்துப் பெண்களும் எத்தகைய வாழ்க்கை சூழ்நிலையிலும் துணிந்து போராடலாம் என்று விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

குடும்ப உறவுகள், சுயநலப் பற்றுகள் என்பவற்றைத் துறந்து, எமது இனம், எமது தேசம், எமது மக்கள் என்ற பரந்த அடிப்படையிலான நோக்கத்திற்காக அவர் நடத்திய இந்தத் தியாகப் போராட்டம் அதியுன்னதமானது. 32நாள்கள் ஆகாரம் எதுவுமின்றி தன்னையே உருக்கி தாயகத்திற்கு ஈந்த இந்தத் தற்கொடை இதுவரை உலக வரலாற்றில் நிகழாத ஒரு போராட்ட சம்பவமாகும். விடுதலை இலட்சியத்துக்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்த உலகத்தின் முதற் பெண்மணி என்ற பெருமையை அன்னை பூபதி எமது போராட்டத்திற்குத் தேடித் தந்தார்.

### பெண்களின் எழுச்சிக்குரல்

போராட்டத்தின் எழுச்சிக்குரலாக பெண் குலத்தின் சக்திவடிவமாக அன்னை பூபதி 19.04.1988 அன்று தனது 58ஆவது வயதில் எமது தேசத்தின் அணையாத தீபமானார்.

அன்னை பூபதி தனது அஹிம்சைப் போராட்டத்தில் தன்னைத் தற்கொடையாக்கி 15வருடங்கள் மறைந்து விட்டபோதும், அவரது தியாகம் என்றென்றும் எமது மக்கள் மனங்களில் அணையாத சுதந்திரச் சுடராக நிலைத்துவிட்டது.

எனவே இத்தகைய தற்கொடையாளி அன்னை பூபதியை நினைவு கூரும் இப்புனிதநாளில் எமது விடுதலைப் போராட்டத்தில் தமக்குள்ள தேசியக் கடமையை உணர்ந்து அனைத்துத் தமிழீழப் பெண்களும் அணிதிரண்டு போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க உறுதி பூணவேண்டும். ◆


## மலர்கின்ற பூவும் அம்மா உன் பெயர் சொல்லும்....

செந்தமிழ் நாட்டிற்காய்
உந்தனுயிர் ஈந்திட்ட அன்னையே!
சொந்தமண் மீட்டிட
எம் தமிழர் சிந்திய குருதியில்
உன் புகழ் நிமிர்ந்திங்கு
உலகமெங்கும் கேட்குதம்மா
நெஞ்சினில் உறுதியுடன்
வஞ்சகராம் அந்நியரின்
முகத்திரை கிழித்தெறிந்த
முத்தாரமே பூபதி அம்மா!

விடிவொன்று விரையுதம்மா
விந்தை தந்த வீரர் புகழ்
எந்தையர் போற்றிட
சிந்துகள் பாடுதம்மா!

புலர்கின்ற பொழுதினில்
மலர்கின்ற பூக்களும்
பூபதி என்றுந்தன்
புகழ் இசைக்கும் நாள் வரும்.

ஆறுகால்மடம்
செந்தூர்ராஜ்



## ஆகுதியான அன்னை பூபதி!

தாயக வேள்வித் தீயினி லெங்கள்
தாயவ ளாகுதி யானது கண்டோம்
தீயினி லெழுந்த சுடரதன் சூட்டில்
தீயவர் பொசுங்கித் தொலைந்ததும் கண்டோம்
நாயக ராகிய போர்மற வீரரின்
நற்றவத் தாயே, நற்றமிழ் மணியே ~ உந்தன்
சேய்களின் மூச்சில் சுதந்திரக் காற்று
சேர்ந்திடும் போதினில் சிலிர்த்துமே மகிழ்வாய்!

அனலையூர்ச் சேந்தன்.

## தாயின் பலமாய் நீ

இதய மேடைகளில் பௌமியமாய்
துயில் கொள்ளும், காவியத் தாயே!
இன்று...
உன்னுடைய நாள்.
இனிக்கின்ற இந்நாளில்....
விழி போடும் துாபங்களுடன் நாம்
தாயின் பலம் அதைப் பேணுவது.
உலகிற்கே எடுத்தியம்பிய
உத்தமி.
வரண்டுபோன காலங்களில்
வான் மழை போல்
ஆழ் கடலில் மரக்கலத்தின்
துடுப்புப் போல்
நீ
பிள்ளைகளுக்கு இலட்சியத்தை
ஊட்டி விட்டாய்
பலன், இன்று
பார் போற்றுகின்றது.
வா. வாவென்று அழைக்கின்றது.
தாயே!
"காலத்தில் விஞ்சி
ஞாலத்தில் நிலைத்துள்ளாய்"
உன் கனவு பலிக்கும்
நாள்... வெகுதூரமில்லை.

புலோப்பளையூர்
பே.பாஸ்கரன்.

# சமாதானச் சூழல் நிலைப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகள் தேவை!

**கிறிஸ்தவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஈஸ்ரர் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். அதனை முன்னிட்டு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வழங்கிய வாழ்த்துச் செய்தி இங்கு பிரசுரமாகின்றது.**

### ஈஸ்ரர் வாழ்த்து

அமைதியான ஒரு சூழ்நிலையில் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு ஈஸ்ரர் விழாவினைக் கொண்டாடும் அனைவருக்கும் ஈஸ்ரர் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆண்டவர் இயேசு பாடுகள், மரணம என்கின்ற வேதனைமிக்க நிகழ்வுகளைக் கடந்து உயிர்ப்பின் மகிமையடைந்தார். இதன் வழியாக புதுயுகத்தையும் புதிய வாழ்வையும் எமக்குப் பெற்றுத்தந்தார்.

உயிர்ப்பு விழா அல்லது பாஸ்கா விழா. இதனை நினைவுகூர்ந்து கொண்டாடும் காலமாகும். ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்கின்ற நிகழ்வுகளோடு எமது வாழ்வின் அனுபவ நிகழ்வுகளையும இணைத்து அர்த்தம் காணும் விழாவே ஈஸ்ரர் விழாவாகும்.


### புத்தாண்டு வாழ்த்து

தமிழ் - சிங்களப் புத்தாண்டும் இத்தேவப்பகுதியில் மலர்கின்ற வேளையில் இப்புத்தாண்டினை மனமகிழ்வோடு கொண்டாடும் அனைவரையும் நினைத்து அவர்களுக்கும் எம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

### ஈராக் யுத்தம்

போர்ச் சத்தங்களும் இறப்புச் செய்திகளும் இப்போது இல்லை என்ற நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற வேளையில் ஈராக் யுத்தமும் அதன் அழிவும் பற்றிய செய்திகள் எம்மை மீண்டும் மனோ ரீதியாக பாதிக்கத் தொடங்கிவிட்டன. எமது பத்திரிகைகள் தாங்கிவருகின்ற இக்கொடிய போர் பற்றிய செய்திகள் உளவியல் ரீதியாக எமது மண்ணில் முன்பு நடைபெற்ற போரையும் அதன் இழப்புகளையும் இறப்புகளையும் எமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன.

யுத்தத்தை தடுத்து நிறுத்த திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் எடுத்த அனைத்து இராஜீக முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. இரு தனிமனிதர்களின் ஆணவமும் போர் வெறியும் இன்று மனித உயிர்களை அழித்துக்கொண்டிருக்கிறது. போரை நிறுத்துங்கள் என்ற தமது கோரிக்கையை பாப்பரசர் நிறுத்தி விடாது இன்னும் குரல் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். உலக சமாதானத்தை கருத்தில் கொண்டு பாப்பரசரின் இந்த வேண்டுகோளை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். மனித உயிர்களை அழிவிலிருந்து காக்க வல்லவர் இறைவன் ஒருவரே என்ற நம்பிக்கையோடு இப்போர் நிறுத்தப்பட உருக்கமாகச் செபிப்போம்.



### புரிந்துணர்வு ஒப்பந்த ஓராண்டும் நடைமுறைப்படுத்தலும்

எம் மண்ணில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு கடந்து விட்ட நிலையிலும் நிலைமைகள் இன்னும் முழுமையாக அமைதியையும் சமாதானத்தையும் இயல்பு வாழ்வையும் பெற்றுக்கொள்ளவில்லை.

பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நகர்ந்து கொண்டிருந்தாலும் இடையிடையே நடைபெறுகின்ற அசம்பாவிதங்களும் அடாவடித்தனங்களும் யுத்தநிறுத்த மீறல்களும் எம்மை பயமுறுத்திக் கொண்டேயிருக்கின்றன. பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நகர்ந்து செல்ல புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மறுபுறம் முழுமையாக நடைமுறைப்படுத்துவது இரு தரப்பினருக்கும் இடையிலான சமாதான நிலையை நீடிக்க உதவும். தமிழ் மக்களின் நாளைய சுபீட்சமான சமாதான வாழ்வை கருத்தில் கொண்டு இரு தரப்பினரும் இதில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம்.

### உயர் பாதுகாப்பு வலயமும் மீள்குடியமர்வும்

இராணுவ பாதுகாப்பு என்கின்ற போர்வையில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்து தமிழ் மக்கள் பலரை தம் சொந்த இல்லிடங்களுக்குச் செல்லவிடாமல் தடுத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயமானது என்று எண்ணத்தோன்றுகின்றது. உயர் பாதுகாப்பு வலயங்களை தமது வதிவிடங்களாக கொண்டு வாழ்ந்த தமிழ் மக்களை மீளவும் தம் சொந்த இடங்களில் பரீட்சார்த்தமாகவேனும் குடிமர்த்திப் பார்க்கவேண்டும் என்ற எமது வேண்டுகோளை மீளவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

### யாழ்நகர மையப் பகுதி இராணுவ முகாம்

யாழ்நகரின் மையப் பகுதியில் அமைக்கப்படவிருந்த இராணுவ முகாம் பலரின் எதிர்ப்பையும் வேண்டுகோளையும் அடுத்து நிறுத்தப்பட்டது, நிம்மதியைத் தருகின்றது. இராணுவ முகாமினை அமைக்கத் திட்டமிட்ட இந்த இடம் யாழ்நகரத்திற்கு அழகையும் தூய காற்றையும் மன அமைதியையும் தருகின்ற ஒரு கடற்கரைப் பிரதேசமாகும். அப்பிரதேசத்தினை மரங்கள் நிறைந்த திறந்த வெளியாக மக்கள் இளைப்பாற இடமளிக்கும் விதமாக தயார் செய்வதே சிறந்ததாகும். மாநகரசபைக்குச் சொந்தமான வேறு காணிகளில் பொதுஜன அமைதியையும் பாதுகாப்பையும் குழப்பாத வகையில் தனிமையான ஓர் இடத்தில் இந்த இராணுவ முகாமை அமைப்பதே பொருத்தமானதாகும்.

எப்போ எம் மண்ணில் நிரந்தர சமாதானம் நிலவப்போகின்றது? என ஏங்கிக்கொண்டிருக்கும் அனைவருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நிலைப்பாடு கவலை தருவதாகவே இருக்கின்றது. பல முற்போக்கு சிங்கள அரசியல் கட்சிகளும் பௌத்த மதத் தலைவர்களும் தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் வழங்க எப்போதும் முட்டுக்கட்டை போடுவதையே தமது பணியாகக் கொண்டிருப்பதும் வேதனை தருவதாக இருக்கிறது.

### ஊடகங்களின் செயற்பாடு

ஊடகங்கள் எப்போதும் நடுநிலைமையோடு செயற்படுவதே தர்மமாகும். சில தென்பகுதிப் பத்திரிகைகள் செய்திகளைத் திரித்தும் மிகைப்படுத்தியும், பக்கம் சார்ந்தும் வெளியிடுவது சமாதான முயற்சிகளை இன்னும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கட்டட மதியுரைஞர் கூட்டம்

மாவட்ட சூழல்சுற்றாடல் பாதுகாப்புக் கட்டடத் தொழில்நுட்ப மதியுரைஞர் குழுவின் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்குழுவில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பொறியியலாளர்கள், துறைசார்ந்த அறிஞர்கள் இடம்பெறறுள்ளனர். இக்கூட்டத்தில் கட்டடத் தொழில்நுட்பம் உட்பட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இக்குழுவினால் பின்னர் குடாநாட்டில் உள்ள கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் மரவேலைத் தொழிலாளர் ஆகியோருக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ம-10)


## திருநெல்வேலி லயன்ஸ் கழகம்

20.04.2003 நிகழவிருந்த வருடாந்தக் கொண்டாட்டம்
27.04.2003 நிகழும் என அறியத்தருகின்றோம்.

வ.ஸ்ரீதரன். (16955) - கலாநிதி க.குணராசா



## முக்கிய கலந்துரையாடல்

தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியத்தின் கீழ் உள்ள கொடிகாமம், வரணி, புத்தூர்ச்சந்தி, மீசாலை, சாவகச்சேரி, மட்டுவில் நுணாவில், கைதடி போன்ற மன்றங்களின் அங்கத்தவர்கள் அனைவரும் எதிர்வரும் 20.04.2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மீசாலை விக்னேஸ்வராக் கல்லூரியின் பிரதான மண்டபத்திற்கு வருகை தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

விடயம்:- சமாதான சூழ்நிலையில் வியாபார நிறுவனங்களின் நிலை பற்றி ஆராய தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் வருகைதரவுள்ளார்கள். அரசியல், நிதி நிலைபற்றி ஆராயவிருப்பதனால் தவறாது சமுகமளிக்கும் படி வேண்டுகின்றேன்.

*தென்மராட்சி*
*வணிகர் மன்றங்களின் ஒன்றியம்.* (சி-27477) செயலாளர்.


## சமாதான...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னடையவே செய்யும். சமாதானத் திற்கெதிராக செயற்படுபவர்களும் குரல் கொடுப்பவர்களும் தம் நிலையை மாற்றிக்கொள்ள இறைவன் அருள் புரிவாராக.

காலம் நீண்டு போகின்ற போது விடயங்கள் கனிந்து வருவது கடினமாகிவிடலாம். உரிய காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கவேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். பிரதமர் மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இடைவிடாத முயற்சியும் புலிகளின் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சமாதான முன்னெடுப்பும் கூடிய விரைவில் முழு வெற்றியடைய இறைவன் தன் வல்லமை மிக்க கரத்தால் அருளாசி வழங்குவார்.

உயிர்த்த இயேசு எம் மண்ணிற்கு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினைத் தர அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.


## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஒஸ்ரின் கேம்பிரிஜ் பரினா மொடல் கார் விற்பனைக்குண்டு.
*தொடர்பு:- த.ஜெயானந்தன்*
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.
0777301657
(16962)



## இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்

புதிய கணனிப் பிரிவு ஆரம்பம்

★ CHILDREN'S PROGRAMME
★ MS OFFICE
★ COREL DRAW, PAGE MAKER

ஆரம்பம் : 23.04.03 புதன்கிழமை மாலை 5.00 மணி
ஆசிரியர் : M.ரகுநந்தன்
*பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.*

(16959) இ.பொ.நூ.



## அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
## அவசர கலந்துரையாடல்

தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு 8ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெறும். அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.விநாயகமூர்த்தி (M.P.)
தலைவர்.
(C/27472)



## கேள்விப்பத்திரம் கோரல்

காரைநகர் ப.நோ.கூ.சங்கம் புதிதாக கட்டடம் அமைப்பதற்கு பின்வரும் மூலப் பொருள்கள் தேவைப்படுகின்றன. மூலப்பொருள்கள் வழங்குநர்கள் தங்கள் முழுவிவரத்துடன் 25.04.2003ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தலைவர், காரைநகர் ப.நோ.கூ.சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். 26.04.2003ஆம் திகதி காலை 10 மணிக்கு கேள்விச்சபை முன் கேள்விப்பத்திரம் யாவும் திறக்கப்படும். பொருள்களின் அளவுகள், தரங்கள் பரிசோதிக்கப்படும்.

| தேவையான மூலப்பொருள்கள் | கியூப் ஒன்றின் விலை (ஏற்றுக்கூலி, இறக்கு கூலி உட்பட) |
|---|---|
| கண்டகல்லு (6"-9") | |
| 3/4" கிறசர் சல்லி | |
| 5/8" கிறசர் சல்லி | |
| 1" கிறசர் சல்லி | |
| கண்டாவளை மண் | |
| நாகர் கோவில் மண் | |

*தலைவர்,*
காரைநகர் ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.
(சி-27471)



## கட்டடப் பொருள்கள் விநியோகத்திற்கான கேள்வி அறிவித்தல்

gtz

எமது புனர் நிர்மாண திட்டத்தின் கீழ் அடுத்த கட்ட வீடுகள் புனரமைப்பு வேலைகளுக்கு தேவைப்படும் கட்டடப் பொருள்கள் விநியோகத்திற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. தேவைப்படும் கட்டடப் பொருள்களும் விநியோகிக்கப்படவேண்டிய பிரதேச செயலர் பிரிவுகளும் பின்வருமாறு:

| பிரதேச செயலர் பிரிவு / வீடுகளின் எண்ணிக்கை | | தேவைப்படும் பொருள்கள் | | |
|---|---|---|---|---|
| | | மணல் (கியுப்) | கண்ட கல் (கியுப்) | கிறசர் சல்லி 3/4" (கியுப்) |
| சாவகச்சேரி | 175 | 700 | 438 | 350 |
| மருதங்கேணி | 175 | 700 | 438 | 350 |
| சண்டிலிப்பாய் | 50 | 200 | 125 | 100 |
| சங்கானை | 50 | 200 | 125 | 100 |
| பருத்தித்துறை | 50 | 200 | 125 | 100 |
| வேலணை | 50 | 200 | 125 | 100 |
| உடுவில் | 50 | 200 | 125 | 100 |
| கோப்பாய் | 50 | 200 | 125 | 100 |
| நல்லூர் | 50 | 200 | 125 | 100 |
| ஊர்காவற்றுறை | 50 | 200 | 125 | 100 |
| தெல்லிப்பழை | 50 | 200 | 125 | 100 |

மேற்குறிப்பிடப்பட்ட பொருள்களை விநியோகிக்கக் கூடிய நிறுவனம் அல்லது தனிப்பட்ட நபர்கள் 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவத்தில் கேள்விகளை 30.04.2003 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் விவரங்கள் தேவைப்படின் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

GTZ - யாழ் புனரமைப்புத் திட்டம்
472, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2635
222 6011
- வெளிக்கள குழுத்தலைவர்.
18.04.2003 (சி-27470)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 28 - 12 - 1979
விண்ணில் 19 - 04 - 2000

### லெப். இன்னமுதன்

*(செல்வரட்ணம் செல்வதீசன்)*

கனவு கூட கண்டதில்லை நனவாகும் உம் பிரிவென்று குடும்பத்தில் பொறுப்பாகி மரணத்தில் நெருப்பாகி ஆத்மாவின் ராகத்தில், ஆற்றொணா சோகத்தின் அலை கடலின் மீதிருந்து ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.

*கோவில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (16943)

பிரிவால் துயருறும்:
திருமதி செல்வரட்ணம் அன்னமலர் (தாய்),
குடும்பத்தினர்.



## நீங்கா நினைவுகளுடன்

முதலாம் ஆண்டு



தோற்றம் 01 - 05 - 1922
மறைவு 29 - 04 - 2002

**செல்லப்பா நடராஜா**

9ஆம் ஆண்டு



தோற்றம் 11 - 02 - 1934
மறைவு 21 - 04 - 1994

**திருமதி நடராஜா அன்னபாக்கியம்**

திதி: 19.04.2003

அன்பு நிறைந்த பேரொளியாய்
இன் சொல் பேசி அன்புடன்
எம்மைப் பேணிக் காத்து
பண்புடனும் பாசத்துடனும்
எமை வளர்த்த எங்கள் அன்புத் தெய்வங்களே!
என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்...!

*ஊரெழு கிழக்கு,*
*சுன்னாகம்.* (16957)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை தங்கம்மா

வெட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் இல. 90, மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை தங்கம்மா 16.04.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வினாசித்தம்பியின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் லோகநாயகி, தயாபரன் (தபாலகம், பண்டத்தரிப்பு), செல்வரதி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), திருமுருகன், ஞானகுருவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும் பரராஜசிங்கம், இந்துமதி, விமலேந்திரநாதன், சுதர்சினி, வசந்தரூபி ஆகியோரின் மாமியாரும் லதாங்கி, சனதாங்கி, வாகினி, அனுஜன், நிருத்தனா, சிவரஜன், கஜாகரன், வேணுசுஜன், சிந்துர்ஜன், சர்மி, மயூரிகா, அங்கஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல. 90, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (16950)

தகவல்:
பிள்ளைகள்.

# தமிழ்நாடு வரை புகழ் பரப்பிய சதாவதானி கதிரவேற்பிள்ளை

சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 96ஆவது ஆண்டு நிறைவுதினம் இன்றாகும். அதனையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் முதலிடம் பெற்ற மாணவரது ஆக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

எமது நாட்டில் காலத்திற்குக் காலம் அந்நியரின் படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதனால் எம்மிடமிருந்து அழிந்து போனவைகள் எத்தனையோ. அதிலும் குறிப்பாக ஈழத் தமிழர்களின் பண்பாடுகள், மொழி, மதம் என்பவற்றில் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள் மிக வலுவானவை. இந்த வகையில் ஈழத் தமிழர்கள் மீது ஆங்கிலேயர்கள் திட்டமிட்டு நடத்திய தாக்குதல்களினின்றும் தமிழர்களின் பண்பாடுகள், மதம், மொழி என்பவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற உந்துதலால் வெளிக்கிளம்பிய அறிஞர்களில் ஒருவர் சதாவதானி கதிரவேற்பிள்ளை.

இவர் புலோலி நாகப்பிள்ளை என்பவரின் புதல்வர். இவர் இப் பூவுலகில் வாழ்ந்த காலம் முப்பத்தாறு வருடங்களே. (1871 - 1907) இவர் வாழ்ந்த காலம் குறைவு என்றாலும் அவர் அக்காலப் பகுதியினுள் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. சதாவதானி அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்கள் அவரின் பெருமையை நிலை நிறுத்திய வண்ணம் உள்ளன.

இவர் சிறந்த ஆசிரியராக, உரையாசிரியராக, நூலாசிரியராக இருந்ததோடு மட்டுமன்றி பிரசங்கம் செய்வதிலும, வாதிடுவதிலும் சிறந்து விளங்கியிருந்தார். சிறந்த ஆசாரசீலராக வாழ்ந்தவர். வட மொழியிலும் மிகுந்த புலமை உடையவர். தமிழை அழிய விடாது பாதுகாக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் உழைத்தவர்.

செம்பிலே நீர் அருந்தியவர்கள் சில்வரிலும் நீர் அருந்தத் தொடங்கிய காலம். வேட்டி அணிந்தவர்கள் நீளக் காற்சட்டை அணியத் தொடங்கிய காலமாற்றம் நிகழ்ந்த சமயம் இன்றைய காலப்பகுதியில் இருந்து கொண்டு நாம் அவர்கள் பணிகளை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அவர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் நின்று அவர்கள் பணிகளைப் பார்க்க வேண்டும். இந்த வகையில் பார்த்தால் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களின் பணியும் அளவிடற்கரியது.

இவரது பணி ஈழத்தில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் பரந்து விளங்கியது. தமிழ்ப் புலமையினாலும், தன்னலம் கருதாத பணியினாலும் தமிழ் கூறும் உலகினை இலங்கைக்கு கடப்பாடுடையதாக்கிய அறிஞர்களில் இவரும் குறிப்பிடத்தக்கவர். தமது இருபத்தியிரண்டாவது வயதில் தமிழ்நாடு சென்று தமது கல்வி அறிவைப் பெருக்கினார். சென்னை பச்சையப்பன, சாந்தோம், வெஸ்லியன் ஆகிய கல்லூரிகளில் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றிய கதிரவேற்பிள்ளை தம்மை நாடிவந்தவர்களிற்கும் குறைவில்லாது அறிவைப்புகட்டினார்.



இவர் விட்டுச் சென்ற செல்வங்களுள் சிறந்தது தமிழ்த் தென்றல் திரு வி.கல்யாணசுந்தர முதலியார். இவர் கதிரவேற்பிள்ளை சரித்திரத்தை ஒரு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். அத்தோடு தமது வாழ்க்கைக் குறிப்பு என்ற தம் நூலிலும் வேறு சந்தர்ப்பங்களிலும் கதிரவேற்பிள்ளை அவர்கள பற்றி மிகுந்த மதிப்போடு குறிப்பிடுகின்றார். இவர் கதிரவேற்பிள்ளை அவர்களை எமதாசிரியன், எனகுரவன், எங் குருநாதன் என்றெல்லாம் கொண்டாடுகிறார்.

ஆறுமுகநாவலர், தாமோதரம் பிள்ளை போன்றோர் வழியில் இவரும் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்.

'போலியருட்பா மறுப்பு' என்ற நூல கதிரவேற்பிள்ளை அவர்களிற்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்திருந்தது. வடலூர் இராமலிங்கம்பிள்ளை என்பவரை ஐந்தாம் குரவர் எனப்பலா போற்றிப் புகழ்ந்தனர். இதனை ஆறுமுகநாவலர் கண்டித்தார். இதனால் பல சர்ச்சைகள் நிகழ்ந்தன. இந்த வேளை அருட்பா அன்று மருட்பா என்று வாதிட்டு வென்றார்.

இவர் சென்னையில் சதாவதானம் செய்த நிகழ்ச்சி இவருககு சதாவதானி என்ற பட்டத்தைப் பெற்றுக கொடுத்தது. வடமொழிப் பண்டிதர்கள், தத்துவ நிபுணர்கள், சட்ட வல்லுனர்கள், கணித விற்பன்னர்கள், ஆங்கில அறிஞர்கள் அநேகர் குழுமிய சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் 24.02.1907 அன்று பல கோணங்களினின்றும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சிறந்த முறையில் வியக்கத்தக்க வகையில் பதில் அளித்திருந்தார். அந்த வேகம் இவரது அவதான ஆற்றலை விளக்கியது. இதனால் இவருக்கு 'சதாவதானி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

பல போட்டிகளை எதிர் கொண்டும், வழக்கு மன்றம் சென்றும் வாதங்கள் நிகழ்த்தியும் இவர் பற்பல எதிர்ப்புக்களைச் சமாளித்தவர். கதிரவேற்பிள்ளை தம்மிடம் இருந்த ஆற்றல்களைப் பாடஞ்சொல்லிக் கொடுப்பதற்கும், பிரசங்கங்கள் நிகழ்த்துவதற்கும், உரைகளை எழுதுவதற்கும், நூல்களைப் பதிப்பதற்கும், அகராதி வெளியிடவும் பயன்படுத்தியிருந்தார். இந்த வகையில் சைவத்திற்கும், தமிழிற்கும் தமது ஆற்றல்களை அர்ப்பணித்துப் பாடுபட்ட அறிஞர்களில ஈழத்தில் புகழ்பூத்த சதாவதானி என்று எல்லோராலும் அழைக்கப்படும் கதிரவேற்பிள்ளை அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

எமது தமிழும், சைவமும் அந்நிய பண்பாட்டினாலும், மதத்தினாலும் அழிந்து போகவிருந்த சூழலில் இவரது பணிகள் மதிப்பிடற்கரியவை.

## மருதங்கேணியில் வீட்டுத்திட்டம்

செம்பியன்பற்று,ஏப்.19

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 300 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு 'நிகொட்' நிறுவனமும் ஜி.ரி.இசற் நிறுவனமும் முன்வந்துள்ளன.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளிலேயே இவ்வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. 'நிகொட்' நிறுவனம் 125 வீடுகளையும் ஜி.ரி.இசற் நிறுவனம் 175 வீடுகளையும் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

(ஒ-36)


**இலங்கை - கொழும்பு - விவேகானந்தசபை**
**(1902 - 2003)**
**நூற்றாண்டு விழா**

யாழ்.நகரில் நடைபெறும் நிகழ்ச்சி
காலம் :- 20.04.2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பிற்பகல் 3.30 மணி
இடம் :- நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மண்டபம்
தலைவர்:- திரு. D.M.சுவாமிநாதன்
(தலைவர், விவேகானந்தசபை)
பிரதம விருந்தினர்:- கலாநிதி அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்)
சிறப்புரைகள், இசையரங்கு, நடன நிகழ்ச்சி, ஆன்மீக நாடகம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.இராஜபுவனீஸ்வரன் J.P., செயலர்
விவேகானந்தசபை
34, விவேகானந்தமேடு, கொழும்பு-13
(16974)



**SHARP - யப்பான்**



ஷார்ப் (SHARP) யப்பானிய அதி உயர் தொழில்நுட்ப தயாரிப்புக்களை யாழ். நகரிலும் உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்கு பிந்திய சேவையில் பெற்றிட.....

**பிறவுண் அன்ட் கம்பனி**
பிறவுண்ஸ் காட்சியறை
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021-222 5150
குறிப்பு: ஹற்றன் நஷனல் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர் களுக்கு விசேட விலைக் கழிவு 7.5% வழங்கப்படும். ஏப்ரல் 30 வரை மட்டுமே.
(C-27461)



**ராஜா**
**ஸ்கிறீன் பிரிண்டிங் பயிற்சி நிலையம்**
★ ஏப்ரல் மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
★ பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
விண்ணப்பங்களை 20 ஆம் திகதிக்கு முன் காரியாலயத்தில் பதிவுசெய்யவும்.
சகல பிரிண்டிங் வகைகளுக்கும் நேரடி பயிற்சி வழங்கப்படும்.
தொடர்பு:-
இல. 134/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0777 036697



**லிபேட்டி** அச்சுவேலி
இன்று முதல
மாதவன், ஜோதிகா, விவேக் நடித்த
**ஜே ஜே ஜே** (ரீலீஸ்)
[கறுப்புச் சித்திரம்]
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பு.நே)
073 21 2223 (சி-27479)



**நிறைஞ்சனாஸ்**
விஜய், சிநேகா நடித்த
**வசீகரா**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
JURASSIC PARK - 3
(C-27476)



**ராஜா** யாழ்ப்பாணம்
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
**அரசு**
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இக்கும்



**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், ரம்பா, நிழல்கள்ரவி நடித்த
**என்றென்றும் காதல்**
(ரீலீஸ்)
காட்சிகள் தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே.)


## கடந்த மாதம் மட்டும்
# திலீபன் மருத்துவப் பிரிவினர் 13 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஏப்.19

தியாகதீபம் திலீபன் மருத்துவப் பிரிவினர் கடந்த மாதம் மட்டும் தமது மருத்துவமனைகளில் 13 ஆயிரத்து 597 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கியுள்ளனர் என தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மேற்படி நடுவப் பணியகம் செய்திக்குறிப்பு ஒன்றையும் விடுத்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அழியவளை, அடம்பன், நெடுந்தீவு, நைனாமடு, ஐயன்கண்குளம், கற்சிலைமடு மற்றும் மாங்குளம், பூநகரி, அளம்பில் ஆகிய இடங்களில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனைகள் இயங்கிவருகின்றன.

மேற்படி மருத்துவமனையில் கடந்த மாதம் மட்டும் வைரஸ் காய்ச்சல் காரணமாக ஆயிரத்து 478 பேரும், சுவாசப்பாதைத் தொற்றுக் காரணமாக இரண்டாயிரம் பேரும் -

மலேரியாக் காய்ச்சலால் 628 பேரும், தோல் சம்பந்தமான நோய்களுக்காக 772 பேரும், குடற்புழுத் தொற்று காரணமாக ஆயிரத்து 154 பேரும், வயிற்றோட்டம் காரணமாக 260 பேரும் -

காயங்களினால் ஆயிரத்து 401 பேரும், நாய்க்கடியால் 129 பேரும், பாம்புக்கடி காரணமாக 23 பேரும், நெருப்புக் காய்ச்சலால் 7 பேரும், குருதிச்சோகையினால் 245 பேரும், ஒவ்வாமையினால் 308 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் -

இதற்கிடையில் தியாகதீபம் திலீபன் நடமாடும் மருத்துவசேவைப் பிரிவினர் கடந்தமாதம் மூவாயிரத்து 910 நோயாளர்களுக்கு மருத்துவ சேவை வழங்கியுள்ளனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-ரி)

## பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம்,ஏப்.19

அறவழிப் போராட்டக் குழுவின் ஆசிரியர்களுக்கான அறவழி தொடர் பாடல் பற்றிய இருநாள் பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்று முடிந்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து அண்மையில் வருகை தந்திருந்த ஜோன், திருமதி ஜயந்தி சிவா ஆகியோர் இப்பயிற்சிப் பட்டறையை நடத்தினார்கள். (ம-10)

## குளம் புனரமைப்பு

கடந்த மாரி மழை வெள்ளம் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொன்னாலைக் குளத்தின் புனர்நிர்மாண வேலைகளும், வாய்க் கால்களை ஆழமாக்கும் பணிகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண 'நியாப்' திட்டத்தின் கீழ் சுமார் 28 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அடுத்த மாதமளவில் இந்த வேலைத்திட்டம் பூர்த்தியடையும் என்று சுழிபுரம் - பொன்னாலை விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.

(எ-135)


**தேவை**
ஸ்கிறீன் பிரிண்டிங் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
**த. ஸ்ரீமான்**
*கிராம அலுவலர்*
*இணுவில் தென்மேற்கு J/188*
குறிப்பு: பிற்பகல் 3.30 மணிக்குப பின்னர் நேரில் வரவும்.
(16960)



**அவசர தேவை**
1 அல்லது 2 மாதங்கள் நிரம்பிய கறுப்பு அல்லது மண்ணிறம் அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி உடனடியாகத் தேவை.
தொடர்பு:- 070 - 212606
2223548
(16972)


# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி சிவஞானம்

யாழ்ப்பாணம் ஊரெழுவைச் சேர்ந்தவரும் திருகோணமலையில் வசித்தவருமான இளையதம்பி சிவஞானம் அவர்கள் 18.04.2003 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அச்சுவேலியைச் சேர்ந்த திரு.திருமதி இளையதம்பியின் புத்திரனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் பாலகிருஸ்ணன் (உரும்பிராய்), வத்சலா, செல்வராசா, சந்திரா பாலசுப்பிரமணியம் (அதிபர், திஃப்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி), சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா (ஓய்வுபெற்ற படவரை கலைஞர் - நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை), பத்மினி, பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் - அம்பாறை), புஷ்பா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரமணன், நிரஞ்சனா (மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்), நிராஜினி (விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), டிசானி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), சஞ்சயன் (புனித சூசையப்பர் கல்லூரி), அபிராமி (புனித மரியாள் கல்லூரி), அட்சயா, ஆனோல்ட் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.04.2003) சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு இல.345/1,மின்சார நிலைய வீதி, திருகோணமலை இல்லத்திலிருந்து திருகோணமலை இந்து மயானத்திற்கு இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*345/1, மின்சார நிலைய வீதி,*
*திருகோணமலை,*
(C-27478)

தகவல்:
திருமதி ச.பாலசுப்பிரமணியம்
(மகள்)

## பொன்னையா கந்தையா

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் இல.525, பலாலி றோட், யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தையா 16.04.2003 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இராசம்மா ஆகியோரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாயகம் ஆகியோரின் மருமகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் தவச்செல்வம் (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), கணேசராசா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையாரும் பவானி (சுவிஸ்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் சுகந்தி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் லக்ஷிகா (சுவிஸ்), பானுசியா (சுவிஸ்), திலக்ஷன் (சுவிஸ்), மயூரன் (சுவிஸ்), ஜெனிபன் (சுவிஸ்), விதுஷன் (சுவிஸ்), கபிஷன் (சுவிஸ்), அபிநயா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செங்கமலம், விசாலாட்சி, நல்லம்மா, நடராசா, யோகம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2003) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*525, பலாலி றோட்,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
(16971)

தகவல்:
க.விசாலாட்சி
(மனைவி)

# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்காவிட்டால் அரசுக்கான ஆதரவை மு.கா. மீள் பரிசீலனை செய்யும்!

## மூதூரில் வைத்து ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை

மூதூர்,ஏப்.19

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு அரசு உறுதியளிக்காவிட்டால் அரசுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழங்கும் ஆதரவை மீள்பரிசீலனை செய்யவேண்டி ஏற்படும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று மூதூரில் வைத்து எச்சரிக்கை விடுத்தார்.

மூதூர் கட்டைப்பறிச்சான் இராணுவப் பயிற்சி முகாமில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

மூதூரில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். அத்துடன், மூதூர் பகுதியில் சொத்துக்களை இழந்த முஸ்லிம் மக்களுக்கும் மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் அரசு உரிய நஷ்டஈடு வழங்கவேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்ற வகையிலும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற வகையிலும் சகல மக்களும் அமைதிகாக்க வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டும், பொறுமைகாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

கௌரவத்துடன் கூடிய சமாதானமே எமக்கு வேண்டும். மூதூரில் அமைதியை ஏற்படுத்தப் பாதுகாப்புப் படையினரும் புலிகளின் பகுதியிலுள்ள புலிகளின் தலைவர்களும் உதவவேண்டும்.

மூதூர் சம்பவம் சமாதான நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவாகும் என்றே நான் கருதுகின்றேன்.

பாதுகாப்புப் படையினர் அமைதியை ஏற்படுத்த - தேவையேற்படின் ஆயுதங்களைப் பாவிக்க - அனுமதிக்க வேண்டும். ஊரடங்கு வேளையிலும் கூட கொள்ளைச் சம்பவங்களும் தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வேளையில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரும் பொலீஸாரும் ஆயுதங்களை வைத்துக்கொண்டு வாளாவிருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓரிரு தினங்களில் திருமலைக்கு வருவதாக உறுதியளித்துள்ளார். மூதூரில் மேலதிகப் படையினரைக் குவிக்கவேண்டும். புலிகளும் தமது பிரதேசங்களில் தமது போராளிகளைப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தி அமைதியைப் பேணவேண்டும்.

பிரதமர் திருமலை வரும்வரை நான் கொழும்பு திரும்ப முடியாது. எமது மக்களை அநாதரவாகப் பாதுகாப்பின்றி விட்டுச் செல்வது இயலாத காரியம்.

புலிகளுடன் நாங்கள் பேச்சு நடத்தி சாதகமான முடிவுகளைப் பெற்றுள்ளோம். மட்டக்களப்பில் முஸ்லிம்களின் காணிப்பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது - என்றார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் எம்பிக்களான எம்.எஸ்.தௌபிக், நிஜர் தௌபிக், ரிசாட் பதியுதீன், அன்வர் ஸ்மாயில், எச்.எம்.எம்.ஹரீஸ், முஸ்லிம்காங்கிரஸ் செயலாளர் எம்.ரி.ஹசன்அலி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ)

### தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணிப்புக் குழுவின் வாகனத்தில் ஏறி இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கட்டைப்பறிச்சானை நோக்கிச் சென்றனர்.

அங்கு கூடிநின்ற இளைஞர்கள் வாகனத்தை வரவிடாது கட்டைகளைப் போட்டுத் தடுத்தனர். இதனால், எம்.பிக்கள் இருவரும் கீழே இறங்காமல் அதே வாகனத்தில் திரும்பி புறப்பட்ட இடத்திற்கே வந்துசேர்ந்தனர்.

### மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர்களுடன் ஸ்ரீல.மு.காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், சின்ன தௌபீக், நிஜர் தௌபீக், அன்வர் இஸ்மாயில், ஹரீஸ் ஆகிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தன் எம்.பி., துரைரட்ணசிங்கம் எம்.பி ஆகியோரும் பொலீஸ்மா அதிபரும் முப்படைகளின் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இரு அரசியல் கட்சிகளுக்கிடையிலான மோதல்களை - இனவாதத்தை - தூண்டிவிடும் சமூக மோதலகளாக்கி அரசியல் இலாபம் காண முயற்சி செய்யக்கூடாது. இனவாதத்தைத் தூண்டிவிடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களே இங்கு ஏற்படும் அனர்த்தங்களுக்கு பொறுப்பேற்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சர் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படியும் அமைச்சர் உத்தரவிட்டார். இத்தகவல்களை இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். மேலதிக விபரம் எதனையும் வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

### தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியிலும் நல்லூரில் கந்தசுவாமி கோவில் முன்றிலிலும், தென்மராட்சியில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், தீவகத்தில் வேலணைத் துறையூர் ஐயனார் மண்டபத்திலும் அன்னையின் ஈகத்தைப் போற்றும் நினைவு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**மட்டக்களப்பில்**

அன்னை பூபதி பிறந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் - நாவலடியில் நினைவு நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின்றன.

இந்த நிகழ்வுகளில் மட்டக்களப்பு கல்வி வலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், தமிழீழ பாடுமீன் இசைக் குழுவின் இசைக்கச்சேரியும் இடம்பெறும். பிரபல பாடகர்களான சாந்தன் - சுகுமார் முதலானோர் எழுச்சிகீதங்களைப் பாடுவர்.

பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகளின் விசேட தளபதி ரமேஸ், அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர்.

**வன்னியில்**

அன்னை பூபதி நினைவு நாளான இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் உண்ணாவிரதம் மற்றும் நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(ஒ-3-10-16-70-117-180)

## கட்டைப்பறிச்சானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தொடர்ந்து சீருடையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மகேஸ்வரன் ரவிச்சந்திரன் (வயது32) என்ற இளைஞர் உயிரிழந்தார் என புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவங்களில் மொத்தம் 14 தமிழர்கள் காயமடைந்தனர். படுகாயமடைந்த ஏழு பேர் சம்பூர் அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் அறுவர் பின்னர் திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அறுவரில் ஒருவரின் கண்ணில் ஏற்பட்ட காயம் பாரதூரமாக இருந்ததால் அவர் நேற்றிரவே கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

உதயசங்கர் (வயது 25), க.சந்திரமோகன் (வயது 22), அரசரட்ணம் குகன் (வயது 28), க.லிங்கேஸ்வரன் (வயது 36), சிவானந்தன் விமலேந்திரன் (வயது 22) ஆகியோர் திருமலை வைத்தியசாலையில் தற்போது சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கேரமணன் (வயது 21) என்பவரே கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மூதூர் நேற்றுப் பெரும் யுத்தகளம் போலக் காட்சியளித்தது.

மூதூர் - சம்பூர் எல்லையில் உள்ள கட்டைப்பறிச்சானில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கூடி நின்றனர். மறுபுறத்தில் மூதூர் எல்லையில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் கூடி நின்றனர். இரு தரப்பினரும் சரமாரியாகக் கற்களை வீசிக்கொண்டனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் ஆயுதம் தாங்கிய பொலீஸாரும் இராணுவத்தினரும் காவலுக்கு நிற்க, மாறி மாறிக் கல்வீச்சு இடம்பெற்றது.

கட்டைப்பறிச்சான் பகுதியில் இருந்த தமிழ் இளைஞர்கள் மூதூருக்கு வர முற்பட்டபோது இராணுவத்தினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

மூதூர்க் கடற்கரைப் பிரதேசம் ஒரே புகைமண்டலமாகக் காணப்பட்டது. முஸ்லிம்களது மீன்பிடிப் படகுகளுக்குத் தீவைக்கப்பட்டதால் எழுந்த புகை எனத் தோப்பூரில் உள்ள முஸ்லிம் இளைஞர்கள் தெரிவித்தனர்.

மூதூர், வட்டம், தக்குவா நகர், தோப்பூர் ஆகிய இடங்களில் முஸ்லிம்களின் பல டசின் வீடுகள் தீயிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதே சமயம், நேற்றுப் பகல் மூதூரில் பத்துத் தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மூதூர்ப்பகுதியில் பல கடைகளும் கொள்ளையடிக்கப்பட்டு பின்னர் தீயிட்டுக்கொளுத்தப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம் மீனவர்களுக்குச் சொந்தமான படகுகள் நேற்று முன்தினம் இரவு மூதூர் இறங்குதுறையில் இருந்து கடத்திச் செல்லப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. மேலும் படகுகளில் இருந்த மீனவர்களது மீன்பிடி வலைகளும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன என்று அவர்கள் கொழும்பில் இருந்து சென்ற செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். (ஒ-3-4)

### கலவரத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்புக் குழுவினர் பேச்சு நடத்தி வருகிறார்கள். அத்துடன் அரசுடனும் மற்றும் இராணுவத்தினருடனும் தொடர்பு கொண்டுவருகிறோம்.

மூதூரில் இடம்பெற்றுவரும் கலவரங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கு கண்காணிப்புக்குழுவின் உயர் பீடம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. பெரும்பாலும் அந்தச் சந்திப்பு இன்று நடைபெறலாம் - என்றார் கொல்கிஷன்.

(ஒ-3-4)


புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார் நடித்த
அரசு
விஸ்ணு வீடியோ
கொண்டாவில்.
வடமராட்சி வாடிக்கையாளர்களுக்கு
சோலை வீடியோ, பிரதான வீதி
நெல்லியடி
(C/27481)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்.
A/L 2004
Sat., Sun. 7.30 - 9.00 a.m.
Sat., Sun. 12 - 1 p.m.
BY:- குணசிங்கம்
(C/27480)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
O/L DAY CLASS
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:
21.04.2003
Mon. 8.00 a.m.
(16935)

LOGIC
A/L 2003 மாதிரி வினாத் தொகுப்புகள் உடன் விற்பனையாகின்றன:
❋ பூபாலசிங்கம் - யாழ்நகர்
❋ சிறீலங்கா - யாழ்நகர்
❋ தமிழ் பூங்கா - நெல்லியடி
❋ அறிவு அமுது - கிளிநொச்சி
சிதம்பரப்பிள்ளை - நெல்லியடி
(S.R.I.) (16954)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2005 ✡ கலை. வர்த்தக ✡
தமிழ் - N.பாலா
அளவையியல் - R.P.சர்மா
புவியியல் - கிரிதரன்
இந்.நாகரீகம் - N.பாலா
கிறிஸ்தவம் - வசந்தன்
வரலாறு - வாகீசன்
நாட.அரங்கியலும் - மதி
இன்று 19.04.2003 சனி 2 P.M.
(16931)

NIRU KONDAVIL
A/L 2005
கலை, வர்த்தக,
கணித, விஞ்ஞான
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 20.04.2003
(ஞாயிறு 7 மணி)
(16945)

புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார் நடித்த
அரசு
வீடியோ சிந்து
உரும்பிராய்.
(16969)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
★ அரசு
★ காதல் சடுகுடு
வீடியோ விமல்
(16973) யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
★ அரசு
நேற்றைய வெளியீடு
★ காதல் சடுகுடு
★ மந்திரா மரமசிவம் V-CD500/-
பிரதிகள் உடன் பெறலாம்
நிதர்ஷன் வீடியோ
மயிலங்காடு.
எமது பிரதிகளை
★ சந்திரன் பிலிம், யாழ்ப்பாணம்.
★ வீடியோ ஆனந், மானிப்பாயிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(16973)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
பாதுகாப்பான - சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு:
மெயின்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/27281.) தொலைபேசி: 0777-733992

MATHS CENTRE
M.M.V. Road, Nelliady.
O/L DAY CLASS (பகல் நேர வகுப்பு)
(சகல பாடங்களும் நடைபெறும்)
ஆரம்பம் :- 21.04.2003 திங்கள் a.m. 8.00 (ப.நே.)
(16952)

MCS
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (பரமேஸ்வராச் சந்தியருகே, மேல்மாடியில்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIP. IN MEDIA TECHNOLOGY
Cool 3D Photoshop Flash Premiere
யாழ்ப்பாணத்தில் புதிய அறிமுகம்
DIP. IN WEB & MULTIMEDIA
3DS Max Character Studio Affter Effects Swift 3D
Mobilenet Computer Services


## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளை

(சின்னிமுருகர் நல்லம்மா)

காரைநகர், வரிவளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளை அவர்கள் நேற்று (18.04.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வே.பாலசுப்பிரமணியம்.
(பாலன் - மகன்)

வரிவளவு,
காரைநகர்.
(16976)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361.ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.